Registered as a News paper in Sri Lanka

பக்கங்கள்: 06

விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஆண்டு சித்திரை மீ 27 ஆம் உ வியாழக்கிழமை (10 - 05 - 1990) ஹிஜ்ரி 1410 ஷவ்வா 14 ஓசை 81

## உணவு முத்திரை பறிமுதல் விதானை வீட்டுக்கு கல்லெறி

(பூநகரி)

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள இரணைதீவு கிராம சேவை யாளர் அலுவலகத்தின் மீது நள்ளிரவு நேரம் கற்கள் வீசப்படுகின்றன.

இப்பகுதியில் இருந்து பயிலுநர் ஆசிரியர்களாக தெரிவுசெய்யப்பட்டவர்களின் உணவு முத்திரைகளை இந்த கிராமசேவகர் பறித்துவிட்டதே இதற்கு காரண மாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவ நேரம் கிராமசேவகர் எதுவித காயமுமின்றி தப்பித்துக்கொண் டார். இது குறித்து அவர் உயர் அதிகாரிகளுக்கும் புகார் தெரிவித்துள்ளார்.

# அரசியல் சூன்ய நிலையை நீடிப்பது ஆபத்தானது

## ஈ.பி. ஆர். எல். எவ் - அரசு பேச்சு குறித்து விடுதலைப் புலிகள் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

மாகாணசபையை கலைத்து புதிய தேர்தலை நடத்த அரசாங்க தரப்பில் தயக்கம் காணப்படுகிறது. அத்தோடு, அரசியல் அமைப்பின் ஆறாவது சட்டத் திருத் தத்தை நீக்கவும் அரசாங்கம் எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. இத னால் தமிழீழத்தில் ஒரு அரசியல் சூன்ய நிலை நீடிக்கிறது அரசாங்கத்தின் மந் தப் போக்கும், அதனால் தொடரும் அரசியல் சூன்ய நிலையையும் ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தலாமென அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

இதற்கிடையில், எதிர்வரும் 15ந் திகதி ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கத்துடன் அரசு பேச்சு வார்த்தைகளை நடத்தவிருக் கிறது. இது குறித்து விடு தலைப் புலி வட்டாரங்கள் அதிருப்தி தெரிவித்தன.

''ஈ. பி. ஆர். எல். எவ். குழுவினர் இந்திய ஆக்கிர மிப்பை ஆதரித்தவர்கள். இந் திய இராணுவ அட்டூழியங் களுக்கு துணைபோனவர்கள் இந்தத் துரோகத்தனத்தால் எமது மக்களால் நிராகரிக் கப்பட்டவர்கள். இந்தக்குழு வுடன் அரசு பேச்சுக்களை நடத்துவதில் எவ்வித பய னும் ஏற்படப்போவதில்லை. இது குறித்து நாம் எமது அதி ருப்தியை அரசுக்குத் தெரி வித்திருக்கிறோம்'' என்று விடுதலைப் புலிகளின் அரசி யல் ஆலோசகர் அன்ரன் பால சிங்கம் தெரிவித்தார்.

### கவனிப்பாரற்ற தபால் பெட்டி

(ஈச்சமோட்டை)

கொழும்புத்துறை மேற்கில் உள்ள தபால் பெட்டி கவனிப் பார் அற்ற நிலையில் கடந்த மூன்று வருடங்களாக கதவு சேதமடைந்த நிலையில் உள் ளது. இதனால் பொதுமக் கள் தபால் போடுவதற்கு மிக வம் கஷ்டப்படுவதுடன் தூர இடங்களுக்கு செல்லவேண்டி யுள்ளது. (43)

### பிள்ளைத்தமிழ் நூல் வெளியீடு

இணுவில் செகராசப் பிள்ளையார் பிள்ளைத்தமிழ் நூல் வெளியீட்டு விழா இன்று வியாழக்கிழமை மாலை 3. 30 மணிக்கு இணுவில் செகராசப் பிள்ளையார் ஆலய முன்றலில் நடைபெறும்.

கலாநிதி சபா. ஜெயராசா தலைமையில் இது நடை பெறும்.

### மூன்று மாடி கட்டடம்

(ஈச்சமோட்டை)

ஆசிய அபிவிருத்தி வங்கி யின் உதவிமூலம் கொக்கு வில் இந்துக்சல்லூரிக்கு புதிய மாடிக்கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

சுமார் எண்பது லட்சம் ரூபா செலவில் மூன்று மாடி கள் இங்கு கட்டப்படுகிறது.



## கச்சேரி முதல் காங்கேசன் வரை கழிவு எண்ணை!

### வாகனங்கள் விபத்து; பலர் காயம்!

நேற்று அதிகாலை யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி யில் யாழ் கச்சேரியடியிலிருந்து சீமெந்து ஆலைவரை கழிவு டீசல் எண்ணை வீதி முழுவதும் கொட்டப்பட்டிருந்தது.

இதனால் பொதுமக்கள் பெரும்பாதிப்பிற்கு உள்ளாகினர் அவ்வீதியால் சென்ற சைக்கிள்கள், மோட்டார் சைக்கில்கள் வழுக்கி விழுந்ததுடன் விபத்திற்கும் உள்ளாகின. இதனால் வாகனங்கள் பெரும் சேதமடைந்தன. அதேவேளை வாகனங் களில் சென்றவர்கள் விபத்துக்குள்ளாகி காயமடைந்ததோடு, ஆடைகளும் சேதமடைந்தன.

தட்டாதெருச் சந்தியில் இரு மோட்டார் சைக்கிள்கள் வழுக்கி விழுந்து மோதிக்கொண்ட காட்சியை மேலேயுள்ள படத்தில் காணலாம்.

## தனது நட்டத்தை மக்கள் மீது சுமத்தும் மட்டக்களப்பு டிப்போ

(மட்டக்களப்பு)

யாழ்ப்பாணம் - மட்டக் களப்பு சொகுசு பஸ்சேவை

போக்குவரத்துச்சபை உத்தர விட்டுள்ளது.

போக்குவரத்துச்சபை பஸ்

## சாம் இறுதிச்சடங்கு இன்று கொழும்பில்

(கொழும்பு)

கொழும்பு நகரில் கறுவாக் காட்டிலுள்ள கனடியத் தூத ரகத்தின் முன்பாகக் கிடந்த

பட்டிருந்த போது ஜனாதிபதி பிரேமதாசா, பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன்

## பெண் மரணம்

(முல்லைத்தீவு)

அண்மையில் உடப்பில்இளம் பெண் ஒருவர் பாம்பு கடித்து உடன் மரணமடைந் தார். உடப்பில் இருந்து செம்மலை கடற் கரையோர மீன்வாடி

[illegible]

# சுமத்தும் மட்டக்களப்பு டிப்போ

(மட்டக்களப்பு)

யாழ்ப்பாணம் – மட்டக்களப்பு சொகுசு பஸ்சேவையில் பயணக்கட்டணமாக நூறு ரூபா உடனடியாகவே முதல்நாளில் செலுத்தப்படுகிறது.

ஆனால் ஆசனப்பதிவுக்கு என்று பத்து ரூபாவையும் முதல் நாளிலேயே பயணிகள் செலுத்த வேண்டும் என்று போக்குவரத்துச்சபை உத்தரவிட்டுள்ளது.

போக்குவரத்துச்சபை பஸ்களில் ஆசனப்பதிவு ஐந்து ரூபாவாக இருக்கும்போது பத்துரூபாஅறவிடுவதுஏனென் அதிகாரிகளைக் கேட்டபோது சபை நட்டத்தில் இயங்குவதாலேயே இவ்வாறு அறவிட வேண்டியுள்ளது எனத் தெரிவிக்கின்றனர். (37)

# மின் கட்டணம் செலுத்த இரு வார கால அவகாசம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகரசபை மின் கட்டணம் செலுத்த தவறிவரும் பாவனையாளர்களின் மின்சார துண்டிப்புக்கு இருவாரகால அவகாசம் வழங்கியுள்ளது.

இருவார காலத்திற்குள் மின்கட்டணம் செலுத்தக் கோரும் இறுதி எச்சரிக்கை மாநகரசபை ஆணையாளர் திரு கே. கார்த்திகேசு விடுத்துள்ளார்.

சபைக்குச் சுமார் 40 லட்சம் ரூபா மின்கட்டணம் நிலுவையாக வந்து சேர வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (37)

# நயினாதீவு இறங்குதுறை காற்றினால் பலத்த சேதம்

(வேலணை)

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்திற்கு முன்பாக இருக்கும் இறங்குதுறைமுக மேடை அண்மையில் வீசிய காற்றினாலும் கடல் அலைகளினாலும் அடித்துப்பலத்த சேதத்துக்குள்ளானது.

மேடையில் கிடந்த கூழாங்கற்கள் எல்லாம் காற்றினால் அள்ளிச்செல்லப்பட்டு வீதிகள் கடல் துறைமுகம் ஆகியவற்றிற்கு வீசி எறியப்பட்டன.

ஏற்கனவே பழுதான நிலையில் உள்ள துறைமுக மேடையும் இடிந்து கடலுக்குள் அப்படியே அமிழ்ந்து விட்டன

(6ஆம் பக்கம் பார்க்க)

[illegible]

மிப்பை ஆதரித்தவர்கள். இந்திய இராணுவ அட்டூழியங்களுக்கு துணைபோனவர்கள் இந்தத் துரோகத்தனத்தால் எமது மக்களால் நிராகரிக்

[illegible] வித்திருக்கிறோம்'' என்று விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

# ராக்கிங்கில் ஈடுபடுவோருக்கு கடும் தண்டனை

(கொழும்பு)

பல்கலைக் கழகங்களில் புதிதாக அனுமதிக்கப்படும் மாணவர்களைச் சிரேஷ்ட மாணவர்கள் 'ராக்கிங்' செய்வது கண்டுபிடிக்கப்பட்டால், 'ராக்கிங்' செய்வதில் ஈடுபடுபவர்கள் கடுமையான தண்டனைக்குள்ளாவார்கள் என்று பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரெட்ணா தெரிவித்தார்.

பல்கலைக்கழக மாணவிகளிடமிருந்து ராக்கிங் இம்சைகள் பற்றி கூடுதலான புகார்கள்

(6ஆம் பக்கம் பார்க்க)

# சாம் தம்பிமுத்து கொலை பிரேமா அதிர்ச்சி கவலை

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்ட எம். பி. சாம தம்பிமுத்து படுகொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்து தாம்பெரும் அதிர்ச்சியும்' கவலையும் அடைந்துள்ளதாக ஜனாதிபதி ஆர். பிரேமதாசா விடுத்துள்ள அனுதாபச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

சாம் தம்பிமுத்து வழக்கறிஞராக விளங்கியதுடன், பாராளுமன்ற விவாதங்களில் உற்சாகத்துடன் கலந்து கொண்டார்.

ஜனநாயக பாரம்பரியங்களைப் பேணுவதற்கு அவர் ஆற்றிய பங்களிப்பு பெரிதும் நினைவுகூரப்படவேண்டும்.

(6ஆம் பக்கம் பார்க்க)

# ரயில் சேவை தாமதமாவதற்கு ஒரு இயந்திரமே காரணம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். கொழும்பு ரயில் சேவை தினமும் நேரதாமதமாக புறப்படுவதற்கு ஒரே ஒரு புகையிரத இயந்திரம் மட்டுமே சேவையில் ஈடுபடுவதே காரணமாகும் என யாழ். மத்திய புகையிரத நிலைய அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இவ் விடயம்பற்றி இவர்கள் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் அதிகாலையில் வரும் தபால் இரயிலின் இயந்திரத்தையே தொடர்ந்து பயணிகளை ஏற்றிச்செல்ல பயன்படுத்தவேண்டி இருப்பதாகவும் இடையில் பல இயந்திரப்பரிசோதனை செய்வதற்கும் எண்ணை நிரப்புவதற்கும் நேரம் ஒதுக்கவேண்டி இருப்பதனால் தினமும் காலை ரயில் தாமதிப்பது தவிர்க்க முடியாததாக உள்ளது எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில வருடங்களுக்கு முன்பு வடபகுதிக்கு சுமுகமாக இரயில்சேவை நடந்துகொண்டிருந்தபோது இரண்டு இயந்திரங்கள் சேவையில் ஈடுபட்

(6ஆம் பக்கம் பார்க்க)

# இன்று கொழும்பில்

(கொழும்பு)

கொழும்பு நகரில் கறுவாக் காட்டிலுள்ள கனடியத் தூதரகத்தின் முன்பாகக் கடந்த திங்கட்கிழமை சுட்டுக் கொல்லப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட எம். பி. சாம் தம்பிமுத்துவின் பூதவுடல் சிராவஸ்தியில் நேற்று வைக்கப்பட்டிருந்த போது ஜனாதிபதி பிரேமதாசா, பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா மற்றும் அமைச்சர்களும் சென்று இறுதி அஞ்சலி செலுத்தினர். இன்று கனத்தை மயானத்தில் தம்பிமுத்துவின் [illegible]மச்சடங்குகள் நடைபெறும்.

**கலாவுக்கு பலத்த பாதுகாப்பு**

நேற்று முன் தினம் திரு. சாம்தம்பிமுத்துவின்பூதவுடல்

(6ஆம் பக்கம் பார்க்க)

# துவாரகாபீட சுவாமி விடுதலை

(பூரி)

சர்ச்சைக்குரிய ஸ்ரீராம ஜென்ம பூமியில் ஸ்ரீராமர் கோயிலுக்கு அடிக்கல் நாட்டும் வைபவத்தைநடாத்த எத்தனித்ததற்காகக் கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த துவாரகாபீடஜகத்குரு சங்கரராச்சாரிய சொருபானந்த சுவாமிகள் நேற்றுமுன்தின[illegible] இரவு விடுதலை செய்யப்பட்டார். அவர் விரும்பிய இடத்துக்குச் செல்லலாம் என்பது விடுதலையின் பின் அவருக்குத் தெரிவிக்கப்பட்டது.

[illegible]

அண்மையில் உடப்பில்இளம் பெண் ஒருவர் பாம்பு கடித்து உடன் மரணமடைந்தார். உடப்பில் இருந்து செம்மலை கடற் கரையோர மீன்வாடி அருகில் இளம் குடும்பப் பெண் கண்டங் கருவளை'' என்னும் பாம்பு கடித்து முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் மரணமானார்.

இருபத்திநாலு வயதுடைய திருமதி எஸ். செல்வியம்மா ஒரு குழந்தைக்கு தாய் இவரது பூதவுடல் தகனக்கிரிகைகளுக் அவரது சுற்றத்தவர் உடப்புக்கு கொண்டு சென்றுள்ளார்கள். (58)

# கிணற்றுள் வீழ்ந்த யானையை வெளியே எடுக்க நடவடிக்கை

(வவுனியா)

ஓமந்தை நாவற்குளத்தில் கிணற்றுக்குள் காட்டுயானைக் குட்டி ஒன்று விழுந்து, வெளிவர முடியாமல் தவித்துக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த யானையைக் கிணற்றுக்குள்ளிருந்து மீட்டெடுப்பதற்கான நடவடிக்கையில் வவுனியா உதவி அரசாங்க அதிபர் இமெல்டா அற்புதராஜா மேற்கொண்டுள்ளார்.

இரவு நேரம் காட்டுக்குள்ளிருந்து வந்த யானை தவறி கிணற்றுக்குள் விழுந்து விட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

சுமார் மூன்று வயது மதிக்கத்தக்க இந்த யானைக்குட்டி

(6ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழ இணக்க மன்று

(யாழ்ப்பாணம்)

மக்கள் அன்றாட பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு தமிழீழ இணக்க மன்றுகளை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் அமைத்துள்ளனர். இவ் தமிழீழ இணக்க மன்றுகள் ஒவ்வொரு சிற்றூரின் அடிப்படையிலும அமைக்கப்படவுள்ளது. இவ் தமிழீழ இணக்க மன்றுகள் சிறப்பாக நடைபெற அவற்றின் அமைப்பு விதிகளை உள்ளடக்கியதாக தமிழீழ இணக்க மன்று என்றும் கைநூலும் வெளியிடப் (6ம் பக்கம் பார்க்க)

## நீர்த்தாங்கி திறப்பு வைபவம்

(நாவாந்துறை)

நாவாந்துறை வசந்தபுரத்தில் யாழ். மாநகரசபையால் அமைக்கப்பட்ட நீர்த்தாங்கியை கடந்தசனியன்று யாழ்.

(6ஆம் பக்கம் பார்க்க)

# புனர்நிர்மாணம்தாமதத்திற்கு மரத்தட்டுப்பாடே காரணம்!

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட பாடசாலைகளை புனர்நிர்மாணம் செய்வதில் தடங்கல் நிலை காணப்படுகிறது இந்த தடங்கல்களுக்கு தமக்கு நிலவும் மரத்தட்டுப்பாடே காரணம் என யாழ்ப்பாண கல்வித்திணைக்கள பொறியியலாளர் தெரிவிக்கிறார்.

தற்போதையயாழ்மாவட்ட பாடசாலைகளின் அபிவிருத்தி நிலமைபற்றி அவர் கருத்துத் தெரிவிக்கையில் இந்திய இராணுவ வெளியேற்றத்தைத் தொடர்ந்து வடமராட்சிப் பகுதி பாடசாலைகள் முதலில் அபிவிருத்தி செய்யப்பட்டு வருவதாகவும் யாழ்மாவட்ட பாடசாலைகளுக்கென தம்மால் 110 மில்லியன் ரூபா நிதி மதிப்பீடு செய்துள்ளதாகவும் இதில் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் 73 மில்லியன் ரூபா ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பாடசாலைக்குதேவையான மரத்தை விடுதலைப்புலிகளுடன் கலந்துபேசி பெற்றுக் கொண்டு ஒப்பந்தகாரருக்கு வழங்க இருப்பதாகவும் தெரிவித்தார் ஓரிரு பாடசாலைக

(6ஆம் பக்கம் பார்க்க)

## பயணி தாக்கப்பட்டார்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - யாழ்ப்பாணம் சொகுசு பஸ் பயணி ஒருவர் இலங்கை பொலிஸாரால் கடுமையாக தாக்கப்பட்டார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# உல்லாசப் பிரயாணிகளுக்கு இராணுவப் பாதுகாப்பு

## ஹெலி விபத்து நாசவேலையல்ல

(கொழும்பு)

வட மத்திய மாகாணத்தில் உல்லாசப் பயணிகள் தங்கும் ஹோட்டல்களுக்கு உடனடியாகப் பாதுகாப்பு வழங்கும் நோக்கத்தோடு இராணுவப் பிரிவொன்று அங்கு கடமையாற்ற இருப்பதாகப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேயரட்னா நேற்று முன்தினம் தெரிவித்தார்.

கடந்த வெள்ளியன்று சிகிரியாவில் 'சீகிரி கிராமம்' என்ற உல்லாசப் பயணிகள் ஹோட்டலில் தங்கியிருந்த உல்லாசப் பயணிகளிடம் பலலட்சம்ரூபா மதிப்புள்ள பொருட்களும், பணமும் துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக ரஞ்சன் தெரிவித்தார்,

இராணுவம் உல்லாசப்பயணிகளை எவ்வகையிலும் தொந்தரவு செய்யாது என்றும் இப்பகுதியிலுள்ள உல்லாசப் பயணிகள் ஹோட்டலுக்குப் பாதுகாப்பு வழங்க இராணுவம்இரவில் முகாம்களைவிட்டு வெளியில் வரும் என்றார் ரஞ்சன்.

சனியன்று இரவு அப்பகுதியில் நிகழ்ந்த ஹெலிகொப்ரர் விபத்துப் பற்றி அமைச்சர்

(6ஆம் பக்கம் பார்க்க)

# "தி. அகிலன்" கவிதைகள் ஓர் பார்வை

மரணத்தின் நாட்களை
நாங்கள் எண்ணுகிறோம்!
இப்போது எல்லாம்
உணர்கிறோம்

மரணம்
கடினமானதொன்றல்ல!
ஒரு நாயாய்;
ஒரு அநாதைப் பிணமாய்
புதிய எஜமானர்களுக்காக
தெருக்களில் மரணிப்பதை
நாம் வெறுக்கிறோம்.
மகிழ்ச்சிக்காகப் போராடி
மக்களுக்காக இறப்பதை
நாம் விரும்புகிறோம்......

இளங் கவிஞன் மறைந்த எஸ். திருச்செல்வம் அகிலன் மரணிப்பதற்கு சில நாட்கள் முன்பாக எழுதிய கவிதை. மரணம் இந்த இளவலை மாலை சூடப்போவதை எண்ணி இவன் அஞ்சிவிடவில்லை. மரணத்தைச் சந்தித்தான்இன்றுபலநூறு மாணவர் நெஞ்சங்களில் அவன் குடி கொண்டிருக்கின்றான்.

அகிலன் கவிதைகள் நம் பார்வைக்கு ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்துகின்றது. ஒரு கவிஞனின் உள்ளத் தூய்மையை வெளிக்காட்டும் அதி உன்னத கவிதைகளை அகிலன் படைத்துள்ளான். அகிலனின் கவிதைகளைப் பற்றிய சிறியதொரு நோக்கு இக் கட்டுரையாகும்.

தமிழ் பேசும் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் பரிணாம வளர்ச்சியின் காரணமாக புதிய புதிய கலை இலக்கிய படைப்பாளிகளும் ஒவ்வொரு காலகட்டத்தில் தோன்றினர். தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் வகையில் புதுக் கவிஞர்களின் கவிதைகள் அமைந்தன. இவ் வகையில் மறைந்த அகிலன் எழுதிய கவிதைகளும் குறிப்பிடத்தக்கனவாகும்.

சிறிலங்கா இனவாத அரசுடன் போரிட்டது தொடக்கம் இந்திய வல்லாதிக்க ஆக்கிரமிப்புப் படையினருடனான போர் வரை அகிலனின் கவிதைகளும் காலவேகத்தில் வளர்ச்சி பெற்று வந்துள்ளன.

அத்துடன் இளம் உள்ளங்களின் பருவ வெளிப்பாடுகளையும்; தன் அன்புக்குரியவளுக்கு எழுதிய திறந்த மடல்களும் அகிலனின் கவிதைகளை விசாலப் படுத்துகின்றன

பல்வேறு மன வெளிப்பாடுகளைத் தாங்கியும், ஓர் விடுதலைப் போராளியின் வாழ்வோட்டத்தை வெளிப்படுத்துவதாக அகிலனின் கவிதைகள்



அகிலன்

அமைந்துள்ளன. அகிலன் மறைந்து ஓராண்டின் பின்னர் அவர் எழுதிய கவிதைகள் தொகுக்கப்பட்டு'' மரணம் வாழ்வின் முடிவல்ல'' என்ற தலைப்பில் நூலாக வந்துள்ளது.

ஆக்கிரமிப்புப் படையின் கீழ் எங்கள் வாழ்வு இருண்டு போய்க் கிடக்கையில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மரண நிகழ்வுகளாகவே அமைந்தன. ஒவ்வொருநாளும் அர்த்தமற்றதாக நீடித்தன. இந்த நிகழ்வுகளை அகிலன் எழுதிய கவிதா அடிகளிலிருந்து:

இன்றைய நாள்
இறந்து போயிற்று!
வேறொன்றுமில்லை
மெல்லியதாய்
ஒரு குண்டொலி
கூடவே ஓரிரண்டு
வேட்டுக்கள்
காக்கி உடையில்
துப்பாக்கி சனியன்கள்
சிதறி வந்தன...

ஒருபோராளியின் மறைவை; அவன் மறைவின் மூலம் ஏற்படும் விளைவை மிகச் சிறந்த கவிவரிகள் மூலம் எடுத்துக் காட்டுகின்றார் அகிலன்.

நெல்லியடியில்
கல்லை
கல்மேல் படிந்த மண்ணை
மண்ணின் தூசியை
தூசியை தூக்கிச் செல்லும்
காற்றை
கதவை, நிலையை,
மரத்தை, மாட்டை
மக்களைக் கேட்டுப்பார்...
............
உன்மரணம்

- சார்ள்ஸ் -

ஆயிரம் உன்பெயர்
கொண்டவர்களை
உருவாக்கியது
வளர்த்தெடுத்தது
உறுதிப்படுத்தியது...

இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலம் ஈழத்தில் சமாதானம் நிலவுமென இரு நாடுகளும் தம்பட்டம் அடித்துக் கொண்டன. 'சமாதானப் புறா'பற்றி அகிலனின் கவிதைகள் புதியதொரு பார்வையை ஏற்படுத்துகின்றது,

மீதம் இருக்கும்
அத்தனை பேரையும்
கைது செய்;
வாயை அடை;
கண்கள் இருந்தும்
குருடனாக்கு;
மறுப்பவர்களை
சுட்டுத்தள்ளி
வாய் பிளந்து
காத்து நிற்கும்
பூமியில் போட்டு
புதைத்து மூடு;
உஷார்... உஷார்...
அதோ
'சமாதானப் புறாக்கள்'
ஒப்பந்தம் செய்ய
பறந்து வருகின்றன...

அகிலனின் கவிதைகள் நம் சமூகத்தின் கண்கள் எனலாம். எங்கள் மண்ணின் விடியலுக்கான பூபாளமாக அகிலனின் கவிதைகள் அமைந்துள்ளன. இளவயதில் அகிலன் படைத்த இக்கவிதைகள் காலத்தால் அழியாத நினைவுகளாக மக்கள் மனதில் பதிந்து சொள்கின்றது.

# கலை கலாசார போட்டிகள் ச. ச. நி. சமாஜம் ஏற்பாடு

(கொழும்புத்துறை)

யாழ். மாநகர சனசமூக நிலையங்களின் சமாசம் கல்வி, கலை, கலாசார போட்டிகளை நடாத்தவுள்ளது. யாழ். மாநகர சபை பகுதிச் சனசமூக நிலையங்களுக்கிடையிலான சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியப் போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மரபுவழி இசை நாடகப் போட்டி அகில இலங்கை ரீதியில் நடாத்தப்படுமென்றும் இம்மரபு வழி இசை நாடகம் ஒன்றரை மணித்தியாலக் காட்சியைக் கொண்டதாக அமையவேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 30ஆம் திகதி புதன்கிழமைக்குமுன் போட்டியில் பங்கு பற்றுபவர்கள் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கலை, கலாசார குழுத் தலைவர் கவிஞர் எஸ். தேவதாசன் கோரியுள்ளார். (24)

## விளையாட்டுப் போட்டி

(வந்தாறுமூலை)

மாவடி வேம்பு சிவானந்தா விளையாட்டுக் கழகத்தின் இரண்டாவது வருடாந்த விளையாட்டு விழா 5ஆம் திகதி அன்று ஞாயிற்றுக்கிழமை பகல் 2 மணிக்கு வெகு சிறப்பாக நடைபெற்றது.

இவ் விளையாட்டு விழாவுக்கு பிரதம விருந்ினர்களாக மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அரசியல் பொறுப்பாளர் திரு. கரிகாலன், இராணுவப் பொறுப்பாளர் திரு. கருணா ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (29)

## ஆலய உற்சவம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு கிழக்கு கண்ணகைஅம்மன் எனவழங்கும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய தேர் திருவிழா நேற்று சிறப்பாக நடைபெற்றது.

தேர்த் திருவிழாவுக்கு தீவகத்திலிருந்தும் ஏனைய பகுதிகளிலிருந்தும் ஏராளமான பக்தர்கள் இவ் ஆலயத்திற்கு வந்தனர்.

பக்தர்களுக்கு வேண்டியவசதிகளை ஆலய பரிபாலனசபையினர் ஒழுங்கு செய்தனர். ஆலய அன்னதான சபையினர் அன்னதானம் வழங்கினர். சென்ஜோன் அம்புலன்ஸ் படையின் புங்குடுதீவு கிளையினர்முதலுதவி ஒழுங்குகளை மேற்கொண்டனர்.

நேற்று புதன்கிழமை தீர்த்த திருவிழாவும் வியாழக்கிழமை பூங்காவன திருவிழாவும்நடைபெறும், (22)


வரிவிளம்பரம்

தேவை

ஸ்ருடியோவில் றபர்சீல் வேலை செய்வதற்கும் பழகவும் ஆர்வமுள்ள இளைஞர்கள் தேவை. தரன் ஸ்ருடியோ 9, 8 நவீன சந்தை, யாழ்ப்பாணம். போன் 23585 (R-492)

யாழ்நகரில் இன்றைய சினிமா

மனோகரா - (யாழ்)
தினசரி 4.45, 7.00, 9.45
சனி. ஞாயிறு
10-30, 2-30. 4-45,
700 & 945
DAVID WARBECK IN
THE HUNTERS OF THE GOLDEN COBRA

வெலிங்டன் (யாழ்)
ரகுமான் - நதியா
தினசரி 4-00, 6-45, 9-30
சனி ஞாயிறு 10-30, 2-30, 6-30, 9-30
நிலவே மலரே
(புதிய பிரதி)
B/859

லிடோ (யாழ்)
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு காலை10-30
2-30 9-30
கமல், ரஜனி, ஸ்ரீதேவி
நடித்த
16 வயதினிலே
(B/860)

ஹரன் - (யாழ்)
தினசரி 4·00, 6·45
சனி, ஞாயிறுவிடுமுறை
நாட்களில்
10·30, 2·30, 6·30, 9·30
கமலஹாசன் - சரண்யா
நடித்த
"நாயகன்"
75 நாட்களுக்குமேல் ஓடிய
வெற்றிச் சித்திரம்
(கடைசி வாரம்)
B 88

நியூ சாந்தி (யாழ்)
தினசரி 4.00, 6.45, 9.30
சனி ஞாயிறுவிடுமுறை


## நடமாடும் செயலகம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் 2 ஆவது நடமாடும் செயலகம் இம்மாத இறுதியில் நடைபெறும்.

வெல்லாவெளி உதவி அரச அதிபர்பிரிவு இதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் தலைமைப் பீட உதவி அரச அதிபர் இரா. நாகலிங்கம் தலைமையில் இம் மாதம் 12ஆம் திகதி வெல்லாவெளி உதவி அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெறும்.

# லயன்ஸ் கழகங்களின் ஆளுநர் சாவகச்சேரிக்கு விஜயம்

(சாவகச்சேரி)

லயன்ஸ் கழகங்களின் மாவட்ட ஆளுநர் திரு. பிரேமச்சந்திரா பத்திரானா தமது உத்தியோக பூர்வமான விஜயமொன்றை சாவகச்சேரி லயன்ஸ் கழகத்திற்கு மேற்கொண்டார்.

அவரைசாவகச்சேரிலயன்ஸ் கழக தலைவர் திரு. வி. பி. தியாகராஜா வரவேற்றார்.

சாவகச்சேரிக்கு விஜயம் செய்த லயன்ஸ் கழக ஆளுநர் திரு.பத்திரானாவுடன் அவருடைய பாரியார், மேலவை உறுப்பினர்கள், உதவி மாவட்டத் தலைவர் திரு.கே. பத்மநாதன், வலையத் தலைவர் டாக்டர் எமில் அத்தநாசியர் ஆகியோரும் கூட வந்திருந்தனர்.

சாவகச்சேரி தலைவர் திரு. தியாகராஜா தமது கழகம் இப்பகுதிக்கு செய்த சேவைகளை விபரித்தார்.

எமது பகுதி பக்கத்தில் வறிய குடும்பத்தினரில் பார்வை குறைந்தவர்களுக்கு இலவச மூக்கு கண்ணாடிகள் வழங்கியுள்ளன. வீதி ஒழுங்கு குறியீடுகள், மக்கள் பிரதான பாதை கடப்பதற்கான குறியீடுகள் செய்துள்ளது.

நீரிழிவு நோய் பற்றிய கலந்துரையாடல்கள் நடத்தியுள்ளோம். பாதிப்பு காலங்களில் அகதிகளுக்கு இலவச மருத்துவ சிகிச்சைகள் அளித்துள்ளோம் என்று அவர்கூறினார்,

இதை விட இலவச தையல் பயிற்சிகள் நடத்தியுள்ளோம். என்றார் இதில் சித்தியடைந்த தையல் பயிற்சியாளர்களுக்கு

10ஆவது ஆண்டு

# நினைவஞ்சலி

10-05-1990



பார் வரை அகிலனின் விதைகளும் காலவேகத்தில் வளர்ச்சி பெற்று வந்துள்ளன.

ஒருபோராளியின் மறைவை; அவன் மறைவின் மூலம் ஏற்

அழியாத நினைவுகளாக மக்கள் மனதில் பதிந்து சொள்கின்றது.

# குதிரைப் பந்தயத்தை சட்டபூர்வமாக்க வில்லை

(கொழும்பு)

குதிரைப்பந்தயம் சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளது என்று பத்திரிகை ஒன்றில் வெளியான செய்திதவறானது என இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் நந்தா மத்தியூ கூறியுள்ளார்.

தேசிய குதிரை ஓட்ட விளையாட்டு சங்கம் ஒன்றைப்பதிவு செய்வதற்கு வர்த்தமானி அறிவித்தல் மூலம் வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

குதிரை ஓட்ட விளையாட்டு உடற்பயிற்சிக்கு உதவுவது ஒலிம்பிக் மற்றும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் குதிரை ஓட்டப்போட்டி 1986 முதல் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் விளக்கினார்.


பட்டதாரிகளுக்கும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும்
ஓர் அரிய சந்தர்ப்பம்!

**இலங்கை நிர்வாக சேவை**
**(SLAS)**

தமிழ்ப்பிரதேசங்களில் உள்ள 150க்கும் மேற்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கான

**போட்டிப் பரீட்சை**

1990 ஜூன் மாதம் 23 ஆம் திகதி நடைபெறவிருக்கும் இப் பரீட்சைக்கான

**விசேட பயிற்சி வகுப்புகள்**

**ஆரம்பம்: 12. 5. 90 மு.ப 9 மணி**

பாடநெறி: 1. கிரகித்தல் 2. நுண்ணறிவுத் தேர்வு
3. பொது வினாத்தாள்/விடய ஆய்வு
தகைமைகள்: 30 வயதுக்குட்பட்ட பட்டதாரிகளும்/அரசாங்க உத்தியோகத்தர்களும் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி: 18. 5. 90**

- விரிவுரைகள் சனி, ஞாயிறு தினங்களிலும், விடுமுறை நாட்களிலும்
- இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
- கட்டணம் ரூபா 300/- (முழுப் பயிற்சிக்கும்)

போட்டிப் பரீட்சையின் மூலமே தெரிவு சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்

விண்ணப்பப் படிவங்களையும் விபரத் திரட்டினையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**ASTAN INSTITUTE**
166/1, HOSPITAL ROAD, JAFFNA.
(A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம் 1 ஆம் மாடி) (B.645)




**டாக்டர் N. கோபாலபிள்ளை**
**L. M. S. (Singapore)**

தாய்நாடு தேடி, தேடின தேட்டத்துடன்
முதிர்வுமுன் ஓய்வுபெற்று
ஓடி வந்தீர்கள் எம்முடன்
பெயரில்லா ஒழுங்கையை தங்கள் மாடிகளால்
மற்றவர்களையும் கட்டவைத்து
மின்சார நிலைய வீதியாக்கினீர்கள்!
தமிழர் மானம் கவிழ்க்க வந்தோர்
தங்கள் மாடிகளை சரித்துவிட்டனர்
விலை மதிப்பற்ற பொருளை இழந்தோம் நாம்!
ஆனால் விட்டுச்சென்ற தங்கள்
நோக்கங்கள் சரியவில்லை!

உங்கள் அன்பில் திழைத்த
மனைவி சரஸ்வதி

பிள்ளைகள்
தேவதாசன் (U.K.)
சத்தியவதி சேனாதிராஜா
Dr. சங்கரநாராயணன்
(D. M. O. Nawalapitiya)
ஞானி கோபாலபிள்ளை

பேரப்பிள்ளைகள்
சித்ரா பேரின்பநாதன்(U.K.)
மீரா சேனாதிராஜா
கா. பாலேந்திரன் (Hari)
றோய் சங்கரநாராயணன் (Russia)
ஷேன் சங்கரநாராயணன்

R452

கிளிநொச்சி மாவட்ட ஒப்பந்தகாரர்களைப்

**பதிவு செய்தல்**

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கட்டட மற்றும் ஒப்பந்தகாரர்கள் அனைவரும் 1990. 05. 25ஆம் திகதி அல்லது அதற்கு முன்பதாக இக் கச்சேரியில் தம்மைப் பதிவு செய்து கொள்ளுமாறு இத்தால் கோரப்படுகின்றனர்.

கே. மாணிக்கவாசகர்
மாவட்ட ஆணையாளரும்
அரசாங்க அதிபரும்,
கிளிநொச்சி மாவட்டம்

கச்சேரி,
கிளிநொச்சி,
10. 05. 1990

(B/647)

இதைவிட இலவச தையல் பயிற்சிகள் நடத்தியுள்ளோம். என்றார் இதில் சித்தியடைந்த தையல் பயிற்சியாளர்களுக்கு திருமதி.பத்திரானா சான்றிதழ்களை வழங்கினார்.

இதேவேளையில்புதியஉறுப்பினர்களுக்கு மாவட்ட ஆளுநர் சத்தியப்பிரமாணம்செய்து வைத்தார். ஆளுநர் தனது உரையில்கூறியதாவது:

இலங்கை மாதா இந்நாட்டு மக்கள் அனைவரினதும் தாய் ஆகும்ஒருதாயின்பிள்ளைகளாகிய நாம் அனைவரும் சகோதரர்கள் சகோதரத்துவம், புரிந்துணர்வு, சேவை ஆகிய பண்புகளை வளர்ப்பதே எமது கழகத்தின் அடிப்படைத்தத்துவங்கள். அந்த தத்துவங்களின் அடிப்படையிலே சர்வதேச ரீதியாக எமது கழகம் வளர்ந்துள்ளது.

சகோதரத்துவத்துடன் நீண்டகாலமாக தமிழ், சிங்கள, முஸ்லிம் என்ற பாகுபாடின்றி வாழ்ந்து கொண்டிருந்தோம். அண்மைக் காலமாக எதிர்பாராதநாட்டுச்சம்பவங்களினால் சில விளைவுகள் ஏற்பட்டுள்ளன.

இவைகளுக்கு சுமுகமான பேச்சு வார்த்தைகளினால் நல்ல தீர்வை ஏற்படுத்தமுடியும் என்றார். (35)


**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 4.00, 6.45, 9.30
சனி ஞாயிறுவிடுமுறை நாட்களில்
10:30 2:30,6:30 10:30
ஜெயசங்கர், முத்துராமன் லட்சுமி, நாகேஸ் நடித்த
**கண்ணன் வருவான்**
(புதிய பிரதி)

**வின்ஸர் - யாழ்**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
**இது நம்ம ஆளு**
(புதிய வெளியீடு)

**ராஜா (யாழ்)**
தினசரி 4.00, 6.45, 9.50
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10.30,2.30,6.30,10.30
ரஜனி ஸ்ரீதேவி நடித்த
**மூன்றுமுடிச்சு**
அடுத்த வெளியீடு
மௌனராகம்

மானிப்பாயில்

**சகலவிதமான**

**ஆங்கில மருந்து வகைகளும் சாய்ப்புச் சாமான்களும்**

எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

**MEDI SQURE**
**PHARMACY**
**MANIPAY**

(B/654)

# மன்னர் அதிகாரத்தைப் பகிரத் தவறின்

# நேபாள காங்கிரஸ் கட்சி எதிர்க்கட்சியாகும்

(காட்மண்டு)

தமது அதிகாரங்களை மன்னர் பிரேந்திரா கூட்டு அரசாங்கத்துடன் பகிர்ந்துகொள்ளத் தவறும் பட்சத்தில், தனது கட்சி எதிர்க்கட்சியாக மாற வேண்டி ஏற்படும் - இவ்வாறு நேபாளக் கூட்டு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளில் முக்கியமான தான நேபாளக் காங்கிரஸ் சட்சியின் தலைவரொருவர் கடந்த திங்களன்று தெரிவித்தார்.

மன்னர் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கி அதிகாரங்களைக் கையளித்தால் தான் பிரதம மந்திரியால் செயற்படமுடியுமென கட்சியின் பொதுக் காரியதரிசி கிரிஜா பிரசாத் கொய்ரலா தெரிவித்தார். மன்னரை ஞாயிறன்று சந்தித்தபோது அவர் அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதாக வாக்களித்துள்ளார் என்று கிரிஜா பிரசாத் தெரிவித்தார்.

பிரதமமந்திரி கேட்கும் அதிகாரங்களை தான் வழங்குவதற்குத் தயாராக இருப்பதாகவும், இப்போது பந்து அமைச்சரவையின் பக்கமுள்ளதாகவும் மன்னர் தனக்குத் தெரிவித்ததாக கிரிஜா பிரசாத் தெரிவித்தார்.

மன்னர் அதிகாரங்களை வழங்காவிடில் தாம் ஒரு எதிர்ப்பியக்கத்தைத் தொடங்க விருப்பதாகவும். அதன்விளைவுகளை பின்னால் தெரிந்து கொள்ள முடியுமென்றார்.

மன்னர் தனது அதிகாரங்கள் எதையும் அரசாங்கத்துக்கு மாற்றவில்லை என்பது அமைச்சரவை தெரிந்து கொண்டுள்ளது. அதனால் புதிய நிர்வாகம் தனது அரசாங்க ஊழியர்களுக்குத் தண்டனை அல்லது பரிசை வழங்க முடியாத நிலையில் உள்ளதாக ராஜதந்திர வட்டாரங்கள் கருதுகின்றன.

அரசாங்கம் மாறிவிட்டது, ஆனால் அதிகாரங்கள் கைமாறவில்லை என்று ஒரு சிரேஷ்ர ராஜதந்திரி கருத்துத் தெரிவித்தார்.

## லத். அமெரிக்கா, கிழ. ஐரோப்பாவிற்கு 16 ஆயிரம் மில். அமெ. டொலர் உதவி

(வாஷிங்டன்)

இலத்தீன் அமெரிக்க நாடுகளுக்கும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் புதிதாகக் கடனுதவி வழங்குவதற்கு அமெரிக்க தலைநகரில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் சர்வதேச நாணய நிதியத்தின் நிதி அமைச்சர்களிடையே உடன்பாடு காணப்பட்டுள்ளது.

இவ்வாறு காணப்பட்ட உடன்பாட்டில் இவ் இரு பிராந்தியத்தையும் சேர்ந்த நாடுகளுக்கு அறு''தினாயிரம் மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான நிதியை கடன் வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் இதே மகாநாட்டில் தமது அபிவிருத்திக்காக சர்வதேச நாணய நிதியத்திலிருந்து பெற்றுக்கொண்ட நிதியினை திருப்பி அளிக்காத நாடுகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களை இடைநிறுத்தி வைக்கவும், பெற்றுக்கொண்ட நிதியின் ஒருபகுதியையேனும் திருப்பி அளிக்க முயற்சிஎடுத்த நாடுகளுக்குத் தொடர்ந்து கடன் வழங்கவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

## ஈரானியர் அமெரிக்கரை கடுமையாக வெறுக்கின்றார்கள்

(நிக்கோசியா)

ஈரானியர் அமெரிக்கர்களை கடுமையாக வெறுக்கிறார்கள் என்பதை அமெரிக்கா மறந்து விடக் கூடாது என்று அமெரிக்க பணயக் கைதிகள் இருவரை லெபனானில் விடுதலை செய்தது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில் ஈரான் பாராளுமன்ற சபாநாயகர் தெரிவித்தார்.

அமெரிக்காவுடனான தொடர்புகளை சீர்படுத்த முடியாது என்று சபாநாயகர் அமெரிக்காவை மறுத்துப் பேசியபோது, அவர் கருத்தை வரவேற்ற உறுப்பினர்கள் கரகோசம் செய்தனர்.

மக்களினதும் இஸ்லாம் சமயம், புரட்சி ஆகியவற்றின் எதிரி அமெரிக்கா என்று சபாநாயகர் மஹாடி கறுபி அமெரிக்காவைச் சாடினார்.

தெஹ்ரானுடன் தொடர்புகள் ஏற்படுத்தும் வகையில் அமெரிக்கா எஞ்சியுள்ள பணயக்கைதிகளை விடுதலை செய்யும் படி கேட்கலாம் என்ற எண்ணம் பற்றிக் கருத்து வெளியிடுகையில் இது தவறான கருத்தென்றும், வாஷிங்ரனுடன் தொடர்புகளை ஏற்படுத்த ஒருவரும் சிந்திக்கவில்லை என்றும், அப்படி நடக்கவும் முடியாது என்றார்.

இப்பேச்சு தெஹ்ரான் வானொலியில் ஒலிபரப்பாகியது.

ஈரானும் அதன் நேச நாடான லெபனானும் 400 அரேபிய கைதிகளை விடுதலை செய்யும்படி இஸ்ரேலை வற்புறுத்தும் படி அமெரிக்காவைக் கேட்கலாம் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

அமெரிக்காவும் ஈரானும் பயங்கரவாதத்தைத் தூண்டும் நாடு என்று ஒரு அறிக்கையில் கண்டித்துள்ளது.

## சட்ட விரோதமாக குடியேறியோர் மீது சட்டநடவடிக்கை

(டோக்கியோ)

யப்பானில் சட்டவிரோதமாக குடியேறி வேலைசெய்பவர்களைத் தடுக்கும் சட்டமூலம் யப்பானிய அரசால் கொண்டுவரப்பட்டுள்ளது.

இவர்களை வேலைக்கு அழைத்துக் கொண்டுவந்த போலி முகவர்கள் இந்த சட்டமூலத்தால் அகப்பட்டுக் கொண்டனர்.

இதனால் சட்டவிரோதமாக யப்பானில் தங்கி வேலை பார்க்கும் ஆயிரக் கணக்கான வெளிநாட்டு தொழிலாளர்கள் யப்பானில் உள்ள குடிவரவு குடியகல்வு அதிகாரிகளிடம் சரணடைந்துள்ளனர்.

இந்தச் சட்டமூலம் ஜூன் மாதம் 1ஆம் திகதிமுதல் அமுல் செய்யப்படவுள்ளதாக யப்பான் அரசு அறிவுத்துள்ளது.

இந்தச் சட்டமூலத்தின்படி சட்டவிரோதமாக வேலைக்கு வெளிநாட்டவர்களை அமர்த்தினால் மூன்று வருட சிறைத்தண்டனை வழங்கப்படும்.

யப்பானில் ஒருலட்சம் வெளிநாட்டவர்கள் சட்ட விரோதமாக வேலை செய்வதாகப் புள்ளிவிபரங்கள் தெரிவித்துள்ளன.

## மின்சாரம் துண்டிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகரசபை விபுலானந்தர் இசைநடனக் கல்லூரிக்கான மின்சாரத்தை துண்டித்துள்ளது.

இருவருடத்திற்கு மேலாக மின் கட்டணம் செலுத்தப் படாததே இதற்குக்காரணம்.

மின்சார கட்டண நிலுவையாக 38,000 ரூபா உள்ளது.

(37)

## எமது பகுதியில்உள்ள சில நூலகங்கள் யுத்த காலத்துச் சின்னங்களாக உள்ளன

### - உதவி உள்ளூராட்சி ஆணையாளர்

(பருத்தித்துறை)

நாட்டின்அபிவிருத்தியிலும், சமுதாய எழுச்சியிலும் நூலகங்கள் முக்கிய பங்கினை வகிக்கின்றன. எனவே நூலகங்களை அபிவிருத்தி செய்து நூலக சேவைகளை மக்களுக்குச் சிறப்பாக வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

எமது பகுதிகளின் நூலகங்கள் போதிய வளர்ச்சியடையாமல் இருப்பதும் சில நூலகங்கள் யுத்தகாலச் சின்னங்களாகக் காட்சியளித்துக் கொண்டிருப்பதும் கவலைக்குரியதாகும்.

மேற்கண்டவாறு, அயோத்தி நூலக சேவைகள் ஸ்தாபனத்தினால் இவ்லின் இரத்தினம் பண்பாட்டியல் நிறுவனத்தில் நடாத்தப்பட்ட நூலகர் ஒன்று கூடலிலே உரையாற்றிய யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலால குறிப்பிட்டார்.

இந் நூலகர் ஒன்று கூடலுக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக உதவி நூலகர் திருமதி விமலா பாலசுந்தரம் தலைமை தாங்கினார்.

தொடர்ந்து உரையாற்றிய திரு. டிவகலால குறிப்பிட்டதாவது,

உள்ளூராட்சி மன்ற பொது நூலகங்களை அபிவிருத்தி செய்து மக்களுக்குச் சிறந்த நூலக சேவைகளை வழங்குவதற்குப் பல்வேறு வகையான நடவடிக்கைகள் மேற் கொள்ளப் பட்டுள்ளன.

நூலகங்கள் அரச அலுவலகங்கள் போல் இயங்குவதால் மக்கள் பயன்களைப்பெற்றுக் கொள்ள முடியாது. எனவே நூலகங்கள் மக்களுக்கு முழுமையான சேவைகளை வழங்கக் கூடிய சேவை நிறுவனங்களாக இயங்க வேண்டும்.

நூலகர்கள் தமது முக்கிய பணியினைக் கருத்திற் கொண்டு நூலக சேவையை மக்களுக்குத் திறம்பட வழங்க வேண்டும். நூலகர்கள் கால சமுதாய, விஞ்ஞான மாற்றங்களுக்கேற்ப தமது அறிவு, ஆற்றல்களையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். நூலகங்களில் பல்வேறுவகையான தகவல்களை உள்ளடக்கிய குரும்பசிட்டி இரா. கனகரத்தினம் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

வடக்கு கிழக்கு மலையக தமிழர் சம்பந்தமான 'ஆவண காப்பகம்' ஒன்று நிறுவப்பட வேண்டியது மிக முக்கியமானதாகும். இதற்கு சகலரும் ஒத்துழைப்பு வழங்கி நடவடிக்கை மேற் கொள்ளவேண்டும். இந் நிலையிலே நூலகர்களாகிய உங்களாலும் பல வேலைத் திட்டங்களை மேற்கொண்டு உதவமுடியும்.

இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களுக்கு ஒரு தொடர்பான வரலாறு இல்லை. ஒரு வரலாற்று நூலை எழுதக் கூடிய அடிப்படைத் தகவல்களை, சான்றுகளைத் தரக்கூடிய நூல்கள், ஆவணங்கள் எம்மிடையே மிக அரிதாகவே இருக்கின்றன. இந் நிலையை மாற்றியமைக்க இன்றைய வரலாற்றையாவது சீராகத் திரட்ட 1956 ஆம் ஆண்டிலிருந்து தமிழரோடு சம்பந்தப்பட்ட அனைத்து செய்திகளையும் ஒரே திரட்டாக மாதமொரு ஏட்டுப்புத்தகம் என்ற திட்டத்தின் கீழ் பத்திரிகைகள், சஞ்சிகைகளிலிருந்து செய்திகளைத் திரட்டி வருகின்றேன்.

கடந்த 35 ஆண்டுகளாக இந் நடவடிக்கைகளில் நான் ஈடுபட்டிருக்கின்றேன். நூலகர்களாகிய நீங்களும் இது போன்ற நடவடிக்கைகளுக்கு ஊக்கம் கொடுத்து வந்தால் எதிர்காலத் தமிழினத்திற்குப் பெரும் வரப்பிரசாதமாக அமையும்.

இன்று ஒரு சில நூலகங்களிடையே எமது பிரதேசங்களின் அரசியல், சமூக, பொருளாதர, வரலாற்றுச் செய்திகள் தொகுக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பொதுசன நூலகங்கள், தனியார் நூலகங்களும் ஒன்றிணைந்து வலையமைப்பொன்றின் மூலம்கட்டுப்பாடான தகவல் சேர்க்கை ஒன்றினைத்திட்டமிட்டு ஆரம்பிக்க வேண்டும். இத்தகைய ஒரு தகவல் வங்கியை ஏற்படுத்தி முழு இலங்கைக்கும் ஒரு முன் மாதிரியாகத் திகழ வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் தகவல் வலயம் ஒன்றினை ஏற்படுத்துமுகமாக யாழ். பல்கலைக்கழக உதவி நூலகர் திருமதி விமலா பாலசுந்தரம், அயோத்தி நூலக சேவை ஸ்தாபனத்தைச் சேர்ந்த நூலகர் திரு. என். செல்வராஜா, குரும்பசிட்டி இரா. கனகரத்தினம் ஆகியோருடன் பொதுசன நூலகர்களை உள்ளடக்கிய குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

யாழ். இல[illegible]கைத் தொழில் நுட்பக் கல்லூரி நூலகர் செல்வி பொன்னையாபிள்ளை நன்றியுரை கூறினார்.

(25)

## மக்கள் குறைகள் அறிய அரச அதிபர் நேரடிவிஜயம்

(யாழ்ப்பாணம்)

ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும்மக்களின் பிரச்சினைகளை அறிந்து கொள்வதற்கும் உத்தியோகஸ்தர்களின் வேலைகளை துரிதப் படுத்துவதற்கும் ஏதுவாக நேரடிவிஜயம் செய்ய யாழ். அரசாங்க அதிபர் முடிவு செய்துள்ளார்

கடந்த கால அரசாங்க அதிபர்கள் இப்படியான எதுவித விஜயங்களும் செய்யவில்லை என்பது குறிப்பிடதக்கதாகும்

(லோ)

## வடகிழக்கு பொலிசாருக்கு ஊக்குவிப்பு அலவன்ஸ் இல்லை

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு பகுதிகளில் உள்ள அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஆறுமாத வழங்கப்படவில்லை.

ஏனைய திணைக்களங்களுக்கு வழங்கப்பட்ட இந்தக் கொடுப்பனவு இன்னமும்

கள் ஏற்படுத்தும் வகையில் அமெரிக்கா எஞ்சியுள்ள பண

டும் நாடு என்று ஒரு அறிக்கையில் கண்டித்துள்ளது.

ளது.

இந்தச் சட்டமூலத்தின்படி

யாக 38,000 ரூபா உள்ளது. (37)

# சும்மாகிடந்தசங்கைஊதிக்கெடுக்கும்

# அமைச்சர் ரஞ்சன்

''சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தானாம் ஆண்டி'' என்பது தமிழிலுள்ள ஒரு முதுமொழி.

இந்த முதுமொழியை நிருபித்திருக்கிறார் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும் பெருந் தோட்டத்துறை

எஸ்.எம்.ஜி.

அமைச்சருமான ரஞ்சன் விஜேரத்தினா.

இலங்கையின் குடியேற்ற வெளியேற்றச் சட்டத்துக்கேற்பஇந்தியக் கடவுச்சீட்டுப் பெற்றுக்கொண்ட மலையகத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப் போவதாக அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா சில தினங்களுக்கு முன்னர் அறிவித்திருந்தார்,

இந்த மலையகத் தமிழர்களை நாடு கடத்துவதற்காக தலைமன்னார் - இராமேஸ்வரம் கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு இந்திய அரசைக் கேட்டதுடன் இச் சேவையை ஆரம்பிப்பது பற்றி பேச்சு நடத்தவும் ஏற்பாடு செய்திருந்தார் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா.

மலையகத்தில் சிங்கள மக்களுக்கு வாழ்வதற்கு இடமில்லையென்றும் அவர்கள் வேலை வாய்ப்பின்றிக் கஷ்டப்படுவதாகவும் இதனால் இந்திய இலங்கை ஒப்பந்தம் இந்தியக் கடவுச் சீட்டுப் பெற்ற மலையகத் தமிழர்களைத் திருப்பி அனுப்பப் போவதாகவும் ரஞ்சன் விஜேரத்தினா கூறியிருந்தார்.

கால் நூற்றாண்டுக்கு முன்னர் சிறிமாவும் சாஸ்திரியும் புதுடில்லியில் கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தை வைத்து மலையகத் தமிழரில் ஒருலட்சத்துக்கு மேற்பட்ட மக்களை நாடு கடத்தப் போவதாக அமைச்சர் றஞ்சன் அறிவித்தது தான் தாமதம் அமைதி

யாக இருந்த மலையகத் தோட்டத் தொழிற் சங்கங்கள் அரசியல் கட்சிகள்,வடக்குக் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த அமைப்புக்கள் அத்தனையும் பலத்த ஆட்சேபமும் கடும் கண்டனமும் தெரிவித்துக் கொண்டிருக்கின்றன.

சம்பந்தப்பட்ட இந்தியப் பிரஜைகள் தாம் விரும்பியபடி முடிவு எடுக்க முடியுமென்றும் கட்டாயப் படுத்தி

தொழிலாளரின் தலைவராகவும் கருதப்படுபவர் திரு. தொண்டமான்.

1948 ஆம்ஆண்டில்இலங்கை சுதந்திரமடைந்தது.1947 ஆம் ஆண்டில் இலங்கையின் முதல் பாராளுமன்றத்துக்கு நடைபெற்ற பொதுத் தேர்தலில் மலையகத் தொகுதிகளிலிருந்து தொண்டமான், அஸீஸ் உட்பட இந்திய வம்சாவளியினரே பெரும்பாலான இடங்க

லாளரின் பிரச்சினை புரையோடிப்போனபுண்ணாகி விட்டது.

மலையகத் தமிழ்த் தோட்டத் தொழிலாளரின் உழைப்புக்கும் அவர்கள் இரத்தத்தை வியர்வையாக மட்டும் சிந்தவில்லை. தமது உடல்களையே தேயிலைச் செடிக்கு உரமாகக் கொடுத்தார்களென்பதை பிரபலசிறுகதை எழுத்தாளர் திரு அ. செ. முருகானந்தன் காளிமுத்துவின் பிரசாவுரிமை என்ற சிறுகதையில் அந்த நாளிலேயே எடுத்துக்காட்டியிருந்தார்.

மலையகத் தமிழர் ஒருவர் பிரசாவுரிமை பெறுவதற்கு அவரது தகப்பன் தகப்பனின் தகப்பன் அவரது தகப்பன் இலங்கையில் பிறந்தவர் என்பதற்கு அத்தாட்சி காட்ட வேண்டுமென்று கோரப்பட்டிருந்தது.

குடிவரவு குடியகல்வு இலாகா அதிகாரிகள் முன்னிலையில் காளிமுத்து தாம் வேலை செய்யும் தோட்டத்தில் ஒரு மரத்தின் ஆழமாகக் கிடங்கு வெட்டி எலும்புத் துண்டுகளை எடுத்து தமது தகப்பனுடையதென்றும் மீண்டும் ஆழமாக வெட்டி மற்றொரு எலும்பை எடுத்து தகப்பனின் தகப்பனுடையதென்றும் அத்தாட்சி காட்டுவதாக அக்கதையில் அ.செ.மு. எழுதியிருந்தார்.

இது வெறும் கற்பனைக் கதையாக இருந்தாலும் மலையகத்தமிழ்த் தோட்டத் தொழிலாளரின் உண்மை நிலையையே இது எடுத்துக் காட்டியிருந்தது.

பண்டிதர் நேரு இந்தியப் பிரதமராக இருந்தவரை மலையகத் தோட்டத் தொழிலாளர் சம்பந்தமாக சேர் ஜோன் கொத்தலாவலையுடன் ஓர் ஒப்பந்தம் செய்தார். இது முழுத்தோட்டத் தொழிலாளரையும் உள்ளடக்கவில்லை.

## பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வரும் மலையகத் தமிழ்த் தோட்டத் தொழிலாளரை நாடுகடத்த முடியுமானால் திட்டமிட்ட குடியேற்றத்தினால் தமிழ் மண்ணை அபகரித்திருக்கும் சிங்களவரை ஏன் வெளியேற்றமுடியாது.

அவர்களை நாடு கடத்த முடியாதென்றும் இந்த விவகாரத்தில் இந்திய அரசு, இலங்கை அரசு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய முத்தரப்பும் சேர்ந்து பேச வேண்டுமென்றும் இதன் பின்னரே அவர்களைத் திருப்பி அனுப்பலாம் என்றும் அமைச்சர் சௌமிய மூர்த்தி தொண்டமான் அபிப்பிராயம் தெரிவித்திருந்தார்.

திரு.தொண்டமான் அரசாங்கத்தில் ஒரு சிரேஷ்ட அமைச்சர் மட்டுமன்றி மலையகத் தோட்டத் தொழிற் சங்கங்களின் சக்தி வாய்ந்த பெரிய தொழிற் சங்கமான இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவருமாவார்.மலையகத் தமிழ்த் தோட்டத்

ளைக்கைப்பற்றினர்:

வடக்குகிழக்கு, மலையகம் ஆகியவைகளிலிருந்து தமிழ்ப் பிரதி நிதிகள் கணிசமான அளவில் பாராளுமன்றத்தில்இடம் பெற்றிருந்தனர்.

இதனைக் கண்ட டி. எஸ். சேனநாயகா எதிர்காலத்தில் இந்திய வம்சாவளியினரால் சிங்களவர்களுக்கு ஆபத்து என்று கருதினார். அப்போதே ஆரம்பமான சிங்களப் பேரினவாதம் இலங்கை சுதந்திரமடைந்த ஓராண்டுக்குள் மலையகத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமையையும் வாக்குரிமையையும்பறித்தது.

இலங்கையின் சுதந்திரத்தோடு ஆரம்பமான மலையகத் தோட்டத் தமிழ்த்தொழி

(5ஆம் பக்கம் பார்க்க)

கொள்ள வேண்டும். நூலகங்களில் பல்வேறுவகையான தகவல்களை உள்ளடக்கிய ஆவண சாப்பகங்களாகவும் செயற்படவேண்டும்.

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு பகுதிகளில் உள்ள அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஆறுமாத ஆபத்து ஊக்குவிப்பு கொடுப்பனவு பொலிஸ் பகுதிக்கு வழங்கப்படவில்லை.

ஏனைய திணைக்களங்களுக்கு வழங்கப்பட்ட இந்தக் கொடுப்பனவு இன்னமும் தமக்கு கிடைக்கவில்லை என வடக்கு கிழக்கு பகுதி பொலிஸாரும், பொலிஸ் திணைக்கள ஊழியர்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

இது குறித்து மேலிடத்துக்கு அறிவிக்கப்பட்டும் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

## காங்கேசன்துறை நகராக்கம் பற்றிய ஆய்வுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை பட்டின நகராக்கம் பற்றிய ஆய்வுக் கூட்டம் ஒன்று காங்கேசன் துறை பிரதேச சபைக்கட்டிடத்தில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. டிவகலாலா அவர்கள் நேற்று கூட்டியுள்ளார்.

இவ்ஆய்வுக்கூட்டத்தில் திட்டமிட்ட அடிப்படையில் காங்கேசன்துறை பட்டினம் கையாளப்பட வேண்டியதுஎங்கனம்? என்பது பற்றிய முக்கியத்துவம் ஆராயப்பட்டுள்ளதாக இவ் ஆய்வுக்கூட்டத்திற்கு சென்றுவந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(லோ)

## மாகாணசபை எழுதுவினைஞர் பதவியில் இருந்து இடை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

வடகிழக்கு மாகாணசபையினால் மார்ச்மாதம் முதலாம் திகதிக்குப்பின் அனுமதிக்கப் பட்ட புதிய தற்காலிக எழுதுவினைஞர்கள் பதவியிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் தமது பதவி நீக்கத்தைமீளாய்வு செய்யுமாறு கோரி தற்போது விண்ணப்பித்துள்ளனர்.

இவ்வாறு பதவி நீக்கம் செய்யப்பட்டவர்களில் யாழ். கச்சேரியில் மூன்று ஊழியர்களும் அடங்குவர் என்பது குறிப்பிடதக்கதாகும். (லோ)

## கால்நடை உதவியாளருக்கு மூன்று மாதகாலப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கு மாகாணத்திலிருந்து தெரிவு செய்யப் பட்ட கால்நடை உதவியாளர்களுக்கான மூன்று மாதப் பயிற்சி, திருநெல்வேலி அரசினர் விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெற்று வருகிறது.

இந்தப் பயிற்சி முடிவடைந்ததும் இவர்களுக்கு வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உள்ள கமநல சேவை நிலையங்களில் வேலைக்கு அமர்த்தப்படுவார்கள்.

## பதுளை கொண்பிரன்ஸ் வெற்றி

(காத்தான்குடி)

நோன்புப் பெருநாளை முன்னிட்டு காத்தான்குடியில் நடைபெற்ற கண்காட்சி உதைப்பந்தாட்டப் போட்டியொன்றில் பதுளை கொண்பிரன்ஸ் கழகம் 1-0 கோல் வெற்றியீட்டியது.

காத்தான்குடி மத்திய மஹா வித்தியாலயமை தானத்தில் நடைபெற்ற இப் போட்டியில்மேற்படி கழகத்தை எதிர்த்து காத்தான் குடியின் பிரபல்ய விளையாட்டுக் கழகங்களில் ஒன்றான சன்றைஸ் கழகம்மோதியது.

இறுதி நேரம் வரை சமநிதையிலேயே இரு களங்களும் இருந்து வந்தன. ஈற்றில் பெனால்டி மூலம் பதுளை கொண்பிரன்ஸ் கழகம் ஒரு கோலைப் போட்டு வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு மட்டக்களப்பு மாவட்ட உதைபந்தாட்ட பயிற்சியாளர் மகேசன் நடுவராக கடமையாற்றினார். (55)

## வர்த்தகவிடுமுறையாக அனுஷ்டிக்கவும்

(யாழ்ப்பாணம்)

வெசாக் தினமாகிய இன்றும் நாளை வியாழக்கிழமை ஆகிய இரு தினங்களையும் விடுமுறை நாளாக அமுல் செய்யுமாறு வர்த்தகர் ஊழியர் சங்கம் கேட்டுகொள்கின்றது.

இதனை சகல வர்த்தகர்களும் ஏற்றுக்கொள்ளுமாறும் அது கேட்டுகொண்டுள்ளது. (லோ)

## சாண்டோ சங்கரதாஸ் நினைவு நாள்

(மட்டக்களப்பு)

இரும்பரசன் சாண்டோ சங்கரதாஸ் 21 ஆவது ஆண்டு சிரார்த்த தினம் அண்மையில் நாவற்குடாவிலுள்ள அன்னாரின் சிலை அருகில் சீடர்களினாலும் குடும்ப உறுப்பினர்களினாலும் அனுஷ்டிக்கப்பட்டது.

சாண்டோ வே.ஸ்ரீதாஸ் ஏற்பாடு செய்த இவ்வைபவத்திற்கு திரு. வே. ஸ்ரீதாஸ் தலைமை வகித்தார்.

திரு. கே. கிருஷ்ணபிள்ளை (ஆசிரியர்) பேசுகையில்

அன்னாரைப்போல் உறுதியான உடல், திடமான உள்ளம் இன்றைய இளைஞர்களுக்கு தேவை என்றார்.

சாண்டோ வே. ஸ்ரீதாஸ் பேசுகையில்

அன்னாரின் சீடர்களான நாம் இக்கலை அழிந்துபோக விடாமல் வாழையடி வாழையாக பேணி பாதுகாத்தால் தான் குருநாதருக்கு செலுத்தும் நன்றிக்கடன் என்றார். (37)

# களவாடப்பட்ட டிராக்டர்கள் மீட்கப்பட்டன

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கமநலசேவைகள் நிலையத்துக்கு 6 டிராக்டர்கள் கடந்த வருட இறுதியில் கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்ட சமயம் வவுனியாவில் வழிமறித்து புளொட் டிராக்டர்களைக் கடத்திச்சென்றது.

முல்லைத்தீவு கமநலசேவைகள் திணைக்கள உதவிஆணையாளர் செல்லையா பஞ்சலிங்கம் அவர்களின் முயற்சியால் தேடுதலின்பின் இரண்டு டிராக்டர்கள் திருகோணமலை மாவட்டத்திலிருந்து மீட்கப்பட்டன. மீட்கப்பட்ட டிராக்டர்கள் நேற்று முன்தினம் முல்லைத்தீவுக்குக் கொண்டுவரப்பட்டன.

(58)

# பார்வையற்றவர் எழுதிய ''நான் காணும் உலகம்'' நூல்

(வவுனியா)

விழிப்பார்வை இழந்த இளைஞர் ஒருவர், ''நான் காணும் உலகம்' என்ற தலைப்பிலான நூலொன்றை வெளியிடும் நோக்குடன் வவுனியா கலாசார உத்தியோகத்தரைச் சந்திக்க வந்திருந்தார்.

இ.சாள்ஸ் ராஜ்குமார்என்ற இருபத்து மூன்று வயது நிரம்பிய இளைஞர் ஏற்கனவே தான் நான்கு புத்தகங்களை வெளியிட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் தென்மராட்சி உறுப்பினராக இருந்து வீரமரணமடைந்த கேணல் சிவாவின் நெருங்கிய நண்பராக தான் இருந்தார் என்றும் அவரின் நினைவாக 'நினைவுகளின் நிழல் என்ற நூலைத்தான் வெளியிட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

ஏழாலையைச் சேர்ந்த இவர் கொழும்பில் க.பொ.த. உயர் தர வகுப்பில் கல்வி கற்று வருகிறாராம்.

பிறைலீ (BRAILE) எழுத்துக்களின் மூலம் பாடங்களை கற்றுவரும் இவர் தனது நண்பர் மூலம், தன் சிந்தனைகளை எழுத வைத்து புத்தகங்கள் வெளியிட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## காத்தான்குடியில் மினிப்புயல்

(காத்தான்குடி)

கடந்த திங்கட்கிழமை மாலை காத்தான்குடியில் வீசிய மினிச் சூறாவளி காரணமாக 28 வீடுகளும் ஒரு கடையும் சேதமடைந்தன. இதனைத் தொடர்ந்து இப்பகுதிக்குச் சென்ற காத்தான்குடி உதவி அரசாங்க அதிபர் ஜனாப் உதுமான் லெப்பை பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

## சென்றலைட்ஸ் வெற்றி

(யாழ். விளையாட்டு நிருபர்)

ஒல்ட் பற்றீசியன் விளையாட்டுக்கழக அணிக்கும் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணிக்குமிடையில் யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வ வலைப்பந்தாட்டப் போட்டியில் சென்றலைட்ஸ் கழக அணி 46 - 36 என்றபுள்ளிகள் கணக்கில் வெற்றி பெற்றது.

ஆட்ட ஆரம்பத்தில் வெகு விறுவிறுப்பாக ஆடி முன்னணியில் நின்ற பற்றீசியன் அணி இடைவேளையின்பின் அவர்களின் விளையாட்டு தளர்ந்த நிலையில் இருந்தது.

சென்றலைட்ஸ் தலைவர் ஆர். சுந்தரலிங்கம் மிகவும் சிறப்பாக விளையாடி ரசிகர்களின் பாராட்டுகளைப் பெற்றுள்ளார்.

நடுவர்களாக கே. யதுகுலசிங், எஸ். விக்னேஸ்வரன் ஆகியோர் கடமையாற்றினார்கள்.

(42)

# இன்று 'நூல்வெளியீடு

இன்று வியாழக்கிழமை மாலை மூன்றுமணியளவில் நல்லைஆதீனத்தில் சிரித்திரன் ஆசிரியர் சிவஞானசுந்தரம் அவர்கள் எழுதிய ''சிரித்திரன் சித்திரக்கொத்து'' நூல்வெளியீட்டு விழா திசை ஆசிரியர் மு. பொன்னம்பலம் தலைமையில் இடம்பெறும்.

இவ் வெளியீட்டு விழாவில் பேரா. சிவத்தம்பி, விரிவுரையாளர் சுப்பிரமணிய ஐயர், செங்கை ஆழியான், திக்கவயல் தர்மகுலசிங்கம், பொன் பூலோகசிங்கம், அகளங்கன் ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளார்கள்.

செல்வி. கனகாம்பரி பத்மநாதன் அவர்களதுஇன்னிசைக் கச்சேரி விசேட நிகழ்ச்சியாக இடம்பெறும்.

## பாலஸ்தீன மக்களுக்கு

# உரிமையும் விடுதலையும் வழங்கப்படவேண்டும்

(கொழும்பு)

ஜெருசலேம் இஸ்ரேலின் தலைநகர மென்றும், அது தொடர்ந்தும் இஸ்ரேலின் தலைநகரமாக நிலைத்திருக்க வேண்டுமென்று அமெரிக்க செனேற் சபையும், பிரதிநிதிகள் சபையும் நிறைவேற்றிய தீர்மானத்தையிட்டுத் தாம் ஆழ்ந்த கவலை அடைந்திருப்பதாக ஸ்ரீலங்கா அரேபிய பொருளாதார, நட்புறவுச் சங்கம் வெளியிட்ட அறிக்கை கூறுகிறது.

இந்த அறிக்கையானது மத்திய கிழக்கில் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகட்குப் பாதகமானதும், அமெரிக்காவின் இஸ்ரேல் சார்புக் கொள்கையின் வெளிப்படையான தோற்றமென்றும், இந்த நியாயபூர்வமற்ற செயல் பாலஸ்தீனிய மக்களின் நியாயமான உரிமைகளுக்கு எதிரானதென்றும் அவ் அறிக்கை கண்டிக்கிறது,

பாலஸ்தீனியப் பிரதேசம் முழுமையாக விடுதலையடைந்த பிறகுதான் பலஸ்தீனியர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும். பலஸ்தீனத்தில் வாழும் மக்களுக்கு முழுமையான விடுதலையும், உரிமைகளும் வழங்கப்பட வேண்டும் என்று அமெரிக்காவையும் அதன் காலாள் நாடான இஸ்ரேலையும் அந்த அறிக்கை கேட்கிறது.

அமெரிக்கா இத் திட்டத்தைக் கைவிடாவிட்டால், இலங்கையிலும், சர்வதேச ரீதியிலும் சமாதானபூர்வமான எதிர்ப்பியக்கங்களை நடாத்த உள்ளோம். என்று அந்தச் செய்தி அறிக்கை கூறுகிறது.

## யாழ்.மாவட்ட

# புனர் நிர்மாண வேலை தொடர்ந்து செய்ய முடியாதநிலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட புனர் நிர்மாண வேலைகள் தற்போதைக்கு தொடர்ந்து செய்ய முடியாத நிலை காணப்படுகிறது.

அச்சுவேலி புத்தூர் பகுதிகளில் வெடி வைத்து கற்களை கிளப்ப முடியாத நிலையினாலேயே புனர்நிர்மாண வேலைகள் தாமதமாவதாக யாழ் செயலக செய்திட்ட இணைப்பாளர் தெரிவிக்கிறார்.

அவர் மேலும் புனர் நிர்மாணவேலைகளின் பிரச்சினைகள் பற்றி எடுத்து கூறுகையில் எமக்கு ஒவ்வொரு பிரதேச சபைகளுக்கும் ஒவ்வொரு புல்டோசர் இயந்திரம் தேவை எனவும் இதன் மூலமே எமது பிரதேச அபிவிருத்தியை நல்ல முறையில் நிறை வேற்ற முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

(லோ)

## சின்னவெங்காயம் விலை அதிகரிப்பு

(கல்லாறு)

ஒரு கிலோ இருபது ரூபாய்க்குள் விற்பனையாகிக் கொண்டிருந்த சின்ன வெங்காயத்தின் விலை கல்முனையில் முப்பத்திநான்கு ரூபாய்க்கும் கல்லாறு, கோட்டைக்கல்லாறு, ஒந்தாச்சி மடம், களு

## கொக்கிளாய்கொக்குத்தொடுவாய்க்கு

# உபதபால் நிலையங்கள்

(முல்லைத்தீவு)

கொக்கிளாய் கொக்குத்தொடுவாய் ஆகிய இரண்டு கிராமங்களுக்கும் தனித்தனி உபதபால் நிலையங்கள்இன்று காலை 9 மணியளவில் முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் கே.கந்தசாமி அவர்களால் திறந்து வைக்கப்படும்.

இவ் வைபவத்தில் தபால் திணைக்கள உயர் அதிகாரிகளும், விடுதலைப் புலிகள் மக்கள்முன்னணிமுல்லைமாவட்ட அரசியல் பொறுப்பாளர் கைலாஸ், முல்லைப் பிரதேச அரசியற் பொறுப்பாளர் மனோ, கொக்கிளாய்– கொக்குத் தொடுவாய் பொறுப்பாளர் ரகு, விடுதலைப் புலிகள் முல்லை மாவட்ட இராணுவப் பொறுப்பாளர் திவாகர் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

ஏழு வருடங்களின் பின் தபால் சேவை சீரடைவது குறித்துப் பொதுமக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.(58)

## சேவை பாராட்டு விழா

தனது தொழிலை விசுவாசமாகவும் பற்று வைத்தும் முழு மனதுடன் செய்தால் செய்யுந் தொழிலே தெய்வம் எனச் சேவை செய்து ஆசிரிய குலத்துக்கே மதிப்பைத் தேடித் தந்துள்ளார். இவர் ஆசிரியர் சேவையின் மகத்துவத்தை உணர்ந்து கடமை புரிந்தபடியால் இன்று அதிபராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இவ்வாறு கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையில் உப அதிபராகக் கடமையாற்றி கொக்குவில் நாமகள் வித்தியாலய அதிபராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ள க. திருநாவுக்கரசு அவர்களுக்கு மாணவர்களாலும் ஆசிரியர்களாலும்சேவை பாராட்டு விழா வைபவத்தில் பேசிய அதிபர் கா. கணேசதாசன் இவ்வாறுகூறினார்.


சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம் (வரையுள்ளது)
சுன்னாகம்.

அரிசியாலையில் ஒப்பந்த அடிப்படையில்
கூலிவேலை செய்வதற்கான

**கேள்வி**

எம்மால் சுன்னாகம் மின்சார நிலையத்திற்கு அருகாமையில் நடாத்தப்படும் அரிசியாலயையில் ஒப்பந்த அடிப்படையில் கூலி வேலை செய்வதற்குக் கேள்விகள் கோரப்படுகின்றன.

வேலை விபரங்களையும், கேள்விப் பத்திரத்திற்கான விண்ணப்பப் படிவங்களையும் வேலை நாட்களில் எமது காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி 25 - 05 - 1990

— பொது முகாமையாளர்

சுன்னாகம் பல. நோ. கூ. சங்கம்,
சுன்னாகம். (B/652)



உதவித் தாதியர் பயிற்சி நெறி

**TRAINING FOR NURSES AIDE**

19-5-90 இல் ஆரம்பமாகவுள்ளன

1. தகைமை வாய்ந்த பதிவுத்தாதியர்களால் (R. N. O) விரிவுரைகள் நடைபெறுகின்றன
2. பதினெட்டு மாதகால பாடத்திட்டங்கள் ஆறுமாதகால செய்முறைப் பயிற்சிகள்



உங்கள் நினைவை விட்டகலாவண்ணம்

2. பதினெட்டு மாதகால பாடத்திட்டங்கள் ஆறுமாதகால செய்முறைப் பயிற்சிகள்
3. செய்முறைப் பயிற்சிகள் யாவும் யாழ்நகரின் பிரபல்யம் வாய்ந்த வைத்தியசாலையில் நடைபெறுகின்றன
4. அரச அங்கீகாரம் பெற்ற சர்வதேச தகைமையுடைய சான்றிதழ்
5. பாடத்திட்டங்கள் யாவும் தமிழ் மொழிமூலம் போதிக்கப்படுகின்றன
6. இலவச "அக்குபங்சர்" பயிற்சிகள்

உங்கள் பதிவுகட்கு:-

அதிபர்

Dr. V. P. சுந்தரராஜன்

## சாயி மெடிக்கல் அக்கடமி

இல 10, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

B.817

பத்திநான்கு ரூபாய்க்கும் கல்லாறு, கோட்டைக்கல்லாறு, ஒந்தாச்சி மடம், களுவாஞ்சிக்குடி சந்தைகளில் நாற்பது ரூபாய்க்கு திடீரென உயர்ந்துள்ளது. (45)

## கரப்பந்தாட்டம்

(யாழ். விளையாட்டு நிருபர்)

அரசடி ஜனசக்தி சனசமூக நிலையத்தினால் நடத்தப்பட்டு வரும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் ஓர் அங்கமாக அரசடி ஜனசக்தி விளையாட்டரங்கில் உடுவில் சென் மேரிஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் தாவடி சிறி கணேசா விளையாட்டுக் கழகத்துக்கும் இடையில் நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் இரு செற்றுகளால் 15- 8, 5- 12 என்ற ஸ்கோர் வித்தியாசத்தில் வெற்றியீட்டினர்.

மத்தியஸ்தராக திரு.ஏ தவம் கடமையாற்றினார். (42)


✻ உங்கள் நினைவை விட்டகலாவண்ணம்
அழகிய ✻ கலர் ✻ கறுப்பு வெள்ளைப் படங்கள்
✻ பாஸ்போட் ✻ அடையாள அட்டைப் படங்கள்

வேண்டிய அளவுகளில் இயற்கை எழில் துலங்க படமெடுப்பவர்கள்!

அத்துடன்

✻ மங்கள வைபவங்களை வீடியோ படமாக எடுத்து கொடுப்பவர்கள்

இவற்றுடன்

✻ அதிநவீன டிசைன்களில் உங்கள்
✻ **Bata** ✻ **DSI** பாதணிகளை தெரிவுசெய்ய
உங்களை இன்முகத்துடன் வரவேற்கின்றனர்....

சிவா ஸ்ருடியோ

மானிப்பாய்

(B653)



சகலவித மர அரிவு வேலைகள்

தளபாடங்கள்...

மற்றும்

பலகைகள் - தீராந்திகள் அனைத்திற்கும்

யாழ். நகரில் தனித்துவம் மிக்க ஸ்தாபனம்

வி. சோமசுந்தரம் மரக்காலை

37, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

(B-638)

### சிந்தனைக்கு

நெஞ்சிலுரமுமின்றி
நேர்மைத் திறனுமின்றி
வஞ்சனை செய்வாரடி - கிளியே
வாய்ச் சொல்லில் வீரரடி

- பாரதியார்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 10 - 05 - 90

தொலைபேசி
ஆசிரிய பீடம்: 025-2839 நிர்வாக பீடம்: 2208

## அரசாங்க நியமனங்கள்

"அரசாங்க நியமனங்களிலும் பதவி உயர்வுகளிலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இனித்தலையிடக் கூடாதென்றும் இப்படித் தலையிடும் எம். பிக்கள் அடுத்த தேர்தலில் போட்டியிட முடியாது."

கல்வி உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி இப்படிப் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்திருக்கிறார். "அரசாங்க நியமனங்கள் வழங்குவதில் மாவட்ட அடிப்படையிலும் மாகாண அடிப்படையிலும் தேசிய அடிப்படையிலும் இன விகிதாசாரம் பேணப்பட வேண்டும்.

கடந்த கால நியமனங்களை இது பாதிக்காது. கடந்த காலத்துக்கு இதைப் பொருத்தமானதாகச் செய்தால் பலர் வேலை இழப்பர்.

சிங்களவர்களுக்கு எழுபத்தைந்து சதவீதமும் தமிழர்களுக்கு பன்னிரெண்டு சதவீதமும் முஸ்லிம்களுக்கு எட்டுச் சதவீதமும் இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கு ஆறு சதவீதமும் என்பதே இந்த விகிதாசாரமாகும்''.

இப்படி அமைச்சர் லலித்அத்துலத்முதலி அரசாங்கத்தின் கொள்கைக்கு விளக்கம் அளித்திருக்கிறார்.


1956 ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் அரசகரும மொழியாக ஆக்கப்பட்ட சமயத்தில் பழைய நியமனங்கள் பற்றி யாரும் கவலைப்பட்டதில்லை. தமிழர்களை அரச சேவையிலிருந்து அகற்றவும் புதிதாகத் தமிழர் அரச சேவையில் சேராமல் தடுப்பதுமே சிங்களம் மட்டும் சட்டத்தின் நோக்கமாக இருந்தது.

இந்த நோக்கமே இதுவரை நிறைவேற்றப்பட்டு வந்தது.

திறமைக்கும் தகுதிக்கும் அரச சேவையில் இடமில்லாமல் செய்யப்பட்டது. அதன் விளைவை நாடு அனுபவித்தது.

பின்னர் தமிழ் மாணவர்கள் உயர்கல்வி பெற முடியாமல் தரப்படுத்தல் திட்டம் கொண்டு வரப்பட்டது.

# தமிழகத்தில் ஒளிந்துவாழவேண்டிய அவசியம் புலிகளுக்குக் கிடையாது



## சட்டசபையில் கலைஞர் கருணாநிதி பதில்

(சென்னை)

**றோ மீது கருணாநிதி குற்றச்சாட்டு**

தமிழக அரசுக்கும் புதுடில்லியில் மத்திய அரசுக்கும் இடையே கருத்துவேறுபாடு மோதலை ஏற்படுத்தும் காரியத்தில் மத்திய அரசின் உளவு அமைப்பான 'றோ' ஈடுபட்டுள்ளது என்று தமிழ் நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி செவ்வாய்க்கிழமையன்று தமிழக சட்டப் பேரவையில் பகிரங்கமாக குற்றம்சாட்டினார்.

இதை உணர்ந்து இந்திய பிரதமர் வி. பி. சிங் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் முதலமைச்சர் கூறினார்.

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் ஊடுருவல் அதிகரித்து விட்டதாகவும் இது தொடர்பாக தமிழ் நாடு மாநில அரசுக்கு மத்திய அரசு எச்சரிக்கை விடுத்துள்ளதாகவும் பாராளுமன்றத்தில் பேசப்பட்டுள்ளது குறித்து மார்க்ஸிஸ கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் டபிள்யூ ஆர். வரதராஜன் கேள்வி எழுப்பியபோது முதலமைச்சர் இவ்வாறு பதிலளித்தார்.

இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டபோது இந்திரா காங்கிரஸ் துணைத் தலைவர் குமரி அனந்தன். மற்றும் பீற்றர் அல்போன்ஸ், சொக்கர், ராஜேந்திரன் ஆகிய உறுப்பினர்களும் முதலமைச்சரிடம் பல கேள்விகளை கேட்டனர்.

**கடல் எல்லை மீது மத்திய அரசு நடவடிக்கை இல்லை**

இலங்கை- இந்திய கடல் எல்லை குறித்து கடலோர காவல் படையை ஏற்படுத்த வேண்டும் என தமிழக அரசின் சார்பாக மத்திய அரசுக்கு கோரிக்கை விடப்பட்டது. ஆனால் இதுவரைக்கும் இதற்கான முயற்சிகளை மத்திய அரசு எடுக்கவில்லை என்பது ஆச்சரியமாக உள்ளது என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்.

> விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் தமிழீழம் கிடைக்கவில்லையே தவிர அவர்களுடைய ஆட்சிதான் இப்போது வடக்கு கிழக்கில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே விடுதலைப் புலிகள் இங்கே தமிழ்நாட்டிற்கு வந்து அடைக்கலம் புகுந்து ஒளிந்து வாழ வேண்டிய அவசியம் தேவையில்லை-
>
> —கருணாநிதி

**தமிழ் நாட்டில் முகாம்கள் இல்லை**

தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகள் உட்பட எந்தவொரு தமிழ்ப் போராளிக் குழுக்களின் முகாம்களும் இல்லை எனத் திட்டவட்டமாக குறிப்பிட்ட முதலமைச்சர் இங்கு எந்த தீவிரவாதங்களையும், வன்முறைகளையும் இந்த அரசு அனுமதிப்பதற்கு தயாராக இல்லை என்றார்.

**ஒளிந்து வாழ அவசியமில்லை**

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் தமிழீழம் கிடைக்கவில்லையே தவிர அவர்களுடைய ஆட்சிதான் இப்போது வடக்கு கிழக்கில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

எனவே விடுதலைப்புலிகள் இங்கே தமிழ்நாட்டுக்கு வந்து அடைக்கலம் புகுந்து ஒளிந்து வாழவேண்டிய அவசியம் தேவையில்லை என்றும் முதலமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

**பத்திரிகைகளின் மிகப்படுத்தப்பட்ட செய்தி**

ஏதோ மத்திய அரசு தமிழக மாநில அரசுக்கு எச்சரிக்கை விடுத்திருப்பதாகவும் இதனால் மாநில அரசின் அதிகாரிகள், தலைமைச் செயலாளர், பொலிஸ் டைரக்டர் ஜெனரல் போன்றவர்கள் இந்த விடயத்தில் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளதாகவும் அதனை அவர்கள் இன்னும் கேட்கவில்லை எனவும் பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது,

புதுடில்லியில் டைம்ஸ் ஒப் இந்தியா பத்திரிகையில் இந்தச் செய்திகள் மிகைப்படுத்தி வேண்டுமென்றே பிரசுரிக்கப்பட்டுள்ளன. மார்க்ஸிஸ கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. ரமணி நேற்று இங்கே கூறியதைப்போல எதையாவது ஒன்றை வைத்துக் கொண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக்கு தொல்லை தருவது அல்லது ஆட்சியின் சட்டம், ஒழுங்கு, அமைதி என்பவற்றை தட்டிக் கவிழ்ப்பது என்ற அற்ப ஆசையில் சிலர் ஈடுபட்டு இப்படி எழுதியும் பேசியும் வதந்திகளை பரப்பி வருகின்றனர். அவற்றில் சொல்லப்பட்ட தகவல்கள் மிகைப்படுத்தியே சொல்லப்பட்டுள்ளன.

மாநில அரசுக்கு மத்திய அரசுக்கு எச்சரிக்கை அல்ல, முன்னறிவிப்பு செய்வது வாடிக்கையாகும். இது ஒன்றும் புதிதல்ல, இப்படிப்பட்ட நிலைமைகள் அவ்வப்போது ஏற்படக் கூடும். எனவே, ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று முன்னறிவிப்பு செய்வதும் அதற்கான பதிலை மாநில அரசு மத்திய அரசிற்கு அனுப்புவதும் வாடிக்கையானது. இது இயல்பானது. அந்த வகையில் மாநில அரசு மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு இங்கே நடக்கின்ற நிலைமைகளை எல்லாம் அடிக்கடி எடுத்துச் சொல்லி வருகின்றது.

அண்மையில் கூட புதுடில்லியில் நடைபெற்றமாநாட்டிற்கு தமிழக வருவாய்த்துறை அமைச்சர்மனோகரனி சென்றபோது இங்கே அவையில் அறிவித்ததுக்கு ஏற்பவெளியுறவுத் துறை அமைச்சரை அவர் சந்தித்து நமது கடல் எல்லைப் பிரச்சினை பற்றியும் அது சரியாகக் குறிப்பிடப்படாத காரணத்தால் அதனை தமிழக மீனவர்களுக்கு விளக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என வலியுறுத்தினார்.

அதுமட்டுமல்ல, இங்கே கடலோரக் காவல்படையை ஏற்படுத்த வேண்டும் எனவும் தமிழக அரசின் சார்பில் மத்திய அரசுக்கு சொல்லப்பட்டுள்ளது.

இது வரையில் மத்திய அரசு அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. அதற்கான முயற்சிகளையும் எடுக்கவில்லை என்று தான் நமக்கு ஆச்சரியமாக உள்ளது.

**கடலோரகாவற்படை அவசியம்**

ஏனென்றால் இன்றைக்கு இலங்கையில் தமிழீழத்தில் விடுதலைப் புலிகளின் செல்வாக்கு இருக்கலாம். கிட்டத்தட்ட அவர்களின் ஆட்சி நடைபெறுவதைப் போன்று ஒரு நிலை எதிர் காலத்தில் அவர்களுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே எத்தகைய சூழ்நிலை உருவாகும் என்று நாம் சொல்ல முடியாது. அப்படியான ஒரு சூழ்நிலை உருவாகின்ற நேரத்தில் இங்கே கடலோரக் காவல்படை இருப்பது மிகவும் அவசியம் என்றும், கடற்படைக் கப்பல்களும் படகுகளும் நிறுத்தி வைக்கப்பட வேண்டும் என்பதும் மிகவும் அவசியம் என்று மத்திய அரசுக்கு நாம் எடுத்துச் சொல்லியிருக்கின்றோம்.

தொடரும்.

## விபத்தைத்தடுக்க வீதி விஸ்தரிப்பு

## சுபி மாகிடந்த...,

திருக்கிறார் கலைஞர் கருணா நிதி.

## சட்டவிரோத

இடமில்லாமல் செய்யப்பட்டது. அதன் விளைவை நாடு அனுபவித்தது.

பின்னர் தமிழ் மாணவர்கள் உயர்கல்வி பெற முடியாமல் தரப்படுத்தல் திட்டம் கொண்டு வரப்பட்டது. தமிழ் மாணவர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டனர்.

திறமையிலும் உழைப்பிலும் நம்பிக்கை கொண்ட இளைஞர்களும் மற்றையோரும் அரச சேவையை நம்பிக்கொண்டிருக்கவில்லை. சிலர் திரை கடலோடியும் திரவியம் தேடச் சென்றனர்.

மற்றும் பலர் விவசாயத்திலும் தொழிலிலும் ஈடுபட்டனர். நல்ல வாய்ப்பும் கிடைத்தது. முயற்சியில் இவர்கள் வெற்றியும் பெற்றனர்.

ஆட்சி மாறியது. லலித்அத்துலத்முதலி வர்த்தக கப்பற்றுறை அமைச்சரானார்.

அமைச்சரானதும் அவர் முதலில் செய்த வேலை செத்தல் மிளகாய், வெங்காயம் போன்ற உள்ளூர் உற்பத்திப் பொருள்களை பெருமளவில் இறக்குமதி செய்ததுதான்.

இதனால் வடபகுதித் தமிழ் விவசாயிகளின் பொருளாதாரத்தை முறியடித்தார்.

அரசசேவையிலும் உயர்கல்வியிலும், விவசாயத்திலும் பாதிப்படைந்த தமிழ் இளைஞர்கள் சிங்கள பௌத்த பேரினவாத ஆட்சியாளர்களை எதிர்த்து ஆயுதம் ஏந்திப் போராடத் தொடங்கினார்கள்.

லலித்அத்துலத்முதலி தேசிய பந்தோபஸ்து அமைச்சரானார்.

தமிழ் இளைஞர்களை அடக்கி ஒடுக்கி அழித்தொழிக்க கங்கணம் கட்டினார். வெளிநாடுகளிலிருந்து ஆயுதங்கள் இறக்குமதி செய்தார். கூலிப்படைகளையும் கொண்டு வந்தார். போர் புரிந்தார். வெற்றி காண முடியவில்லை.

இனங்களுக்கிடையே கலகத்தைத் தூண்டிவிட்டார்; பயனில்லை.

வவுனியாவிலிருந்து ஆனையிறவு வரை பத்துலட்சம் சிங்களவரை ஆயுதம் கொடுத்துக் குடியமர்த்தப் போவதாகச் சூளுரைத்தார். பலிக்கவில்லை.

திருக்கோணமலையில் சிறையிலிருந்து வெளியே வந்த கடும் குற்றவாளிகளையும் ஓய்வுபெற்ற ஆயுதப் படையினரையும் ஆயுதம் கொடுத்துக் குடியமர்த்த எத்தனித்தார். சில இடங்களில் இப்படியான கடும் குற்றவாளிகளான சிங்களவருக்கு ஆயுதம் கொடுத்துக் குடியமர்த்தினார். அதிலும் வெற்றி பெறவில்லை.

வடமராட்சியில் லிபரேஷன் ஒப்பரேஷனும் வட பகுதிக்கு உணவுப் பொருள் எரிபொருள் தடையும் செய்து பார்த்தார். வாய்க்கவில்லை!

இப்படி எல்லாவற்றிலுமே தோல்விக்குமேல் தோல்வி கண்ட லலித் வாய்ச்சொல்லில் வீரர்.

தமிழ் இளைஞர்கள் திறமையிலும் உழைப்பிலும் நம்பிக்கையுள்ளவர்கள்.

அவர்கள் அரச சேவையை மட்டுமோ எம். பிக்களின் சிபார்சுக் கடிதங்களையோ நம்பியிருக்கவில்லை.

அத்துலத்முதலியையும் அவர்கள் நம்பியிருக்கவில்லை!

## மக்கள் மடல்

### விபத்தைத்தடுக்க வீதி விஸ்தரிப்பு

ஆசிரியர்,
ஈழநாதம்,

ஐயா

நாம் சாவகச்சேரி கல்லடி வீதி கண்டி வீதியில் வசிப்பவர்கள் எமது வீதியும் கண்டி வீதியும் சந்திக்கும் சந்தியில் ஒரு திடீர் வளைவு உள்ளது இவ்வளைவில்அடிக்கடி வாகன விபத்து ஏற்பட்டு வருவது கவனிக்கக்கூடியதாகும்.

கடந்த காலத்தில் சாவகச்சேரியின் பழைய பொலிஸ் நிலையம் அமைந்த இடம் வரை நகரசபையின் உத்தரவின்பேரில் கண்டி வீதியை அண்மிய தனியார்காணிகளில் இருந்து குறிப்பிட்ட அளவு நிலம் சுவீகரிக்கப்பட்டுகண்டி வீதி அகலமாக்கப்பட்டது. ஆனால் பொலிஸ் நிலையத்திற்கு சிறிது தூரத்தில் அமைந்திருக்கும் எமதுகல்லடி சந்தி மிக அபாயகரமானதாக இருந்தும் சாவகச்சேரி நகரசபை எதுவித கவனமும் செலுத்தாதுஇருப்பதையிட்டு எமது பிரதேச மக்கள் மிகவும் கவலை அடைந்துள்ளனர்.

நாம் இந்நிலைமை பற்றி நகரசபை ஆணையாளரிடம் பலமுறை முறையிட்டிருந்தோம் ஆனால் எதுவித மறு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

பா. இந்திரன்

சாவகச்சேரி.

## பயிலுநர் ஆசிரியர்களுக்கு திசைகோட்படுத்தல் பயிற்சி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆசிரியர் பயிலுநர் நியமனம் பெற்றவர்களுக்கான திசை கோட்படுத்தல் பயிற்சி வகுப்பு நான்கு நிலையங்களில் 9 நாட்கள் நடைபெறும்.

மே 12 ஆம், 13 ஆம், 19 ஆம், 20 ஆம், 26 ஆம், 27ஆம் திகதிகளிலும் ஜூன் 1 ஆம். 2 ஆம், 3 ஆம் திகதிகளிலும் இது நடைபெறும்.

பட்டிருப்பு ம. வி, அரசடி ம.வி, வாழைச்சேனை த.ம.வி, இந்துக் கல்லூரி ஆகிய இடங்களில் இப் பயிற்சி வழங்கப்படும். (37)

## இந்து சமயத்தை வளர்க்க இளைஞர் மன்றங்கள் தேவை

(கொழும்புத்துறை)

''இன்றைய கால கட்டத்தில் இந்து சமயத்தை வளர்க்க கிராமங்கள் தோறும் இந்து இளைஞர் மன்றங்கள் அமைக்கப்பட்டு அவை சமய சமூக சேவையில் முன் மாதிரியாக விளங்கவேண்டும். வெள்ளிக்கிழமை தோறும் நற்சிந்தனைகள் நடாத்தப்பட்டு அவற்றில் பங்கு கொள்வோர் வருடந்தோறும் கௌரவிக்க வேண்டும்.''

இவ்வாறு யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவர் திரு. வெ. கெ. தனபாலன் நுணாவில் சுப்ரமணிய கோயில் இந்து இளைஞர் மன்றச் செயலக திறப்பு விழாவில் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

மன்றத் தலைவர் செல்வன் சுதன் தலைமையில் இத் திறப்பு விழா நடைபெற்றது. சமயப் பெரியார் திரு. காசிப்பிள்ளை மன்றச்செயலகத்தை திறந்து வைத்தார். (24)

## சைக்கிள் பாதுகாப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சந்தைப் பகுதியைச் சேர்ந்த சைக்கிள் பாதுகாப்பு நிலையங்கள் இப்பொழுது தமிழீழ விடுதலைப் புலிகளின் மேற்பார்வையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. (35)

### சூடமாகிடந்த...,

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதன் பின்னர் ஏற்பட்ட ஸ்ரீமா–சாஸ்திரி ஒப்பந்தம் முழுத்தோட்டத் தொழிலாளரையுமே உள்ளடக்கியதாக அமைந்தது.

இலங்கையில் இலங்கைத் தமிழர் பிரச்சினை சம்பந்தமாக 1919ஆம் ஆண்டிலும் 1931 ஆம் ஆண்டிலும் சிங்களத் தலைவர்களுக்கும் தமிழ்த் தலைவர்களுக்குமிடையில் இரண்டு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. இந்த ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்ட மை காயுமுன்பே அவை கிழித்தெறியப்பட்டன.

இலங்கை சுதந்திரமடைந்த பின் இலங்கைத் தமிழர் உரிமைப்பிரச்சினை சம்பந்தமாக 1957ஆம் ஆண்டில் இலங்கைப் பிரதமராக இருந்த எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சி தலைவர் எஸ்.ஜே. வி.செல்வநாயகமும் ஓர் ஒப்பந்தம் செய்தனர். அதுவும் சில தினங்களில் கிழித்தெறியப்பட்டது. பின்னர் பிரதமர் டட்லி. சேனநாயக்காவும் செல்வநாயகமும் ஓர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். அதுவும் சில காலத்தின் பின் கிழித்தெறியப்பட்டது.

இலங்கைத்தமிழர் பிரச்சினையில் இலங்கை அரசு செய்து கொண்ட. ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டபோது எவரும் மூச்சுவிடவில்லை.

இப்பொழுது காலாவதியாகிவிட்ட ஸ்ரீமா – சாஸ்திரி ஸ்ரீமா — இந்திரா ஒப்பந்தங்களையும் தானாகவே காலாவதியாகிவிட்ட ராஜீவ் ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தையும் தூக்கி நிறுத்திக்கொண்டு நிற்கிறார் அமைச்சர் ரஞ்சன்.

ரஞ்சன் விஜேரத்தினா ஊதிய சங்கு கலைஞர் கருணாநிதியிடமிருந்து எதிரொலிக்கத் தொடங்கியிருக்கிறது.

1983 ஆம் ஆண்டிலிருந்து தமிழ் நாட்டுக்கு வந்து தங்கியிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளின் தொகை ஒருலட்சத்துக்கும் அதிகமாகும். இவர்கள் இலங்கைக்குத் திரும்பாதவரை இலங்கை மலையகத் தமிழ்த்தோட்டத் தொழிலாளரை ஏற்க முடியாது என்று பதிலடி கொடுத்திருக்கிறார் கலைஞர் கருணாநிதி.

இதற்கு ரஞ்சன் என்ன சொல்லப்போகிறார்? கணேமுல்லையில் எத்தனை பேரை வைத்திருக்கமுடியும்?

மலையகத்தில் சிங்கள மக்களுக்கு இருக்க நிலமில்லையென்றும், வேலை வாய்ப்பில்லையென்றும் கூறி பரம்பரையாக மலையகத்தில் வாழ்ந்து மலையகத்தைச் செழிப்பாக்கி நாட்டின் பொருளாதாரத்தை வளம்படுத்திய தமிழ்த் தோட்டத் தொழிலாளரில் ஒரு லட்சம்பேரை நாடுகடத்தவேண்டுமென்று அமைச்சர் ரஞ்சன் கூறுகிறார்.

கிழக்கில் திருகோணமலைப் பகுதியிலும், அம்பாறை இங்கினியாகல மற்றும் வெகு சமீபத்தில் வெலிஓயாவிலும் திட்டமிட்டு சிங்களவரைக் குடியேற்றிய தமிழ்மண்ணிலிருந்து அவர்களை ஏன் அவர்களுடைய சொந்த இடங்களுக்கு திருப்பிஅழைத்து தமிழ்மக்கள் தமது சொந்த மண்ணில் வாழவும் தொழில் செய்யவும் இடமளிக்கக் கூடாது?

இதற்கு ரஞ்சன் என்ன பதில் சொல்வார்?

## மெய்வல்லுநர் போட்டி

(பூநகரி)

பூநகரி கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி இம்மாதம் இருபத்தோராம் திகதி பூநகரி மகாவித்தியாலய மைதானத்தில் பிரதிக் கொத்தணி அதிபர் திரு.எஸ். வைரவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்கு கிளிநொச்சி மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. வேலாயுதம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

## சட்டவிரோத மது விற்பனை தடை

(பூநகரி)

பூநகரிப் பகுதியில் சட்டவிரோத மது விற்பனை முற்றாகத்தடைசெய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இச் சட்டத்தை மீறி சட்டவிரோதமாக மதுபான வகைகளை விற்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென புலிகளால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிவித்தல்களைத் தொடர்ந்து தவறணைகளில் மது அருந்துவோர் தொகை அதிகரித்துள்ளது.

## விசர்நாய் சுட்டுக் கொலை

(வந்தாறுமூலை)

வந்தாறுமூலையில் கடந்த வெள்ளிக்கிழமை விசர்நாயின் கடிக்கு ஐவர் இலக்காகினர். இதில் ஆண்கள் பெண்கள் அடங்குவர். தற்போது கடி உண்டவர்கள் அரசினர் வைத்தியசாலையில்சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவ்விசர் நாயை விடுதலைப் புலிகள் சுட்டுக் கொன்றனர். (29)

## குளத்தில் மூழ்கி மரணம்

(பூநகரி)

குளத்திற்கு குளிப்பதற்காகச் சென்ற வயோதிபர் ஒருவர் குளத்தினுள் மூழ்கி பலியான சம்பவம் பூநகரி மட்டுவில் நாட்டில் நடைபெற்றுள்ளது. பொ. இளையதம்பி என்பவரே மேற்படி சம்பவத்தில் பரிதாபகரமாக மரணமடைந்துள்ளார்.

## சாவகச்சேரி மினிபஸ்களுக்கு நீதிமன்றவளவில் நிலையம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நீதிமன்றவளவு இப்பொழுது மினிபஸ் நிலையமாக வெகு விரைவில் மாறி வருகிறது.

இங்கு அடர்ந்து வளர்ந்த செடி பற்றைகள் அனைத்தும் சிரமதான மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரியில் ஓர் மினி பஸ் நிலையம் இல்லாத குறைபாடுகள் இதன் மூலம் தீர்த்துவைக்கப்படவுள்ளது. (35)

ஈழநாதம்

# “இனப்பாகுபாடு எம்மிடம் இல்லை”

# அமைதி சமாதானம்; நமது நோக்கம்

## நம்மை ஏமாற்ற நினைத்தால் பார்த்திருக்க மாட்டோம்

-வவுனியா தினேஷ்

நாம் போராடச்சக்தியற்று, சாவிற்குப் பயந்து பேச்சு வார்த்தைக்கு வரவில்லை. அமைதி, சமாதானம், ஒற்றுமை என்பன ஏற்படவேண்டும் என்பதற்காகவே பேச்சு வார்த்தையில் ஈடுபட்டோம். எமது போராட்டம் சிங்கள இனம்; பௌத்த மதத்திற்கு எதிரானதல்ல. நாம் ஒவ்வொரு இனத்தாரினதும் உரிமைகளை மதிப்பவர்கள், நாம் உண்மையில் விரும்பி நிற்பது அமைதி, சமாதானம் என்பனவே. மேடைப்பேச்சினால் சமாதானம் ஏற்பட்டு விடாது. இது உணர்வு, உளபூர்வமாகவும். செயல் ரீதியாகவும் மக்கள் மனதில் வளர்க்கப்பட வேண்டியன வாகும்.

இன்று தமிழ்பேசும் மக்கள் மத்தியில் சமாதானம் ஏற்படுவதானநம்பிக்கையில்லை. ஆயுதங்கள் ஊடாகவே பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்ற நம்பிக்கை எமது மக்கள் மத்தியில் வலுப்பெற்றிருப்பதை எம்மால் உணர முடிகிறது. இதனால் எம்மக்களை எவரும் ஆயுத வெறியர் என்று நினைக்கக்கூடாது எமது மக்களின் உரிமைகளை வேறு வழிகளில் பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் இன்னமும் தென்படவில்லை.

என விடுதலைப் புலிகள் முன்னணியின் வவுனியா மாவட்ட பொறுப்பாளர் தினேஷ் அநுராதபுரத்தில் இருந்து புறப்படவிருந்த சமாதான ஊர்வலத்தை நிறுத்தியது தொடர்பாக எமது ஈழநாத நிருபருக்குக் கருத்துத் தெரிவிக்கையில் குறிப்பிட்டார்.

மேலும் கருத்துத் தெரிவிக்கையில், போலித்தனமான சமாதான ஊர்வலங்கள். கூட்டங்கள் தோல்வியுற்றதென்றே கருதுகிறோம். மக்கள் உண்மையான, நிரந்தரமான சமாதானத்தையே விரும்புகிறார்கள். செயல் திறமையற்ற போலித்தனமான ஊர்வலங்கள் ஊடாக தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக இருக்கிறார்கள் என்ற மாயையை உலகிற்கு ஏற்படுத்தலாமே தவிர தமிழீழ மக்கள் மத்தியில் உள்ள சந்தேகங்களை சமாதான ஊர்வலங்களால் அகற்ற முடியாது, எனவே சமாதானத்தினை இதயசுத்தியுடன் விரும்புபவராக இருந்தாலும் சரி மேற்கூறப்பட்ட ஒவ்வொரு விடயங்களும் ஆழமாகச் சிந்தித்து செயலாற்றினால் நாம் எதிர்பார்க்கும் உண்மையான சமாதானத்தினைப் பெறலாம்.

எமது 17 வருடகால போராட்ட வரலாற்றில் தமிழீழ மக்கள் தன்னிகரில்லா தலைவராக ஏற்றுக்கொள்ளப்பட்ட திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களை விடுதலைப் போராட்ட வரலாற்றிலேயே இலங்கையின் உளவுப்படை, இலங்கையின் முப்படை, இஸ்ரேலிய உளவுப்படை, பிரித்தானிய உளவுப்படை, இந்திய உளவுப்படை, இந்திய அமைதிப்படை என்ற போர்வையில் வந்த இந்திய ஆக்கிரமிப்புபடை அனைத்து சக்

## தமிழ்நாட்டில் மழை, காற்றால் பாதிப்புற்றோருக்கு நிவாரணம்

(சென்னை)

கடந்த சில நாட்களாக தமிழகத்தில் பெய்த மழை, புயல் முதலியவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணங்களையும் தமிழக அரசு முறையாகச் செய்துவருகிறது என்று முதலமைச்சர் மு. கருணாநிதி சட்டப்பேரவையில் நேற்றுக் கூறினார்.

புயல்பற்றி முன்னெச்சரிக்கை மக்களுக்கு அறிவிக்கப்பட்டு தக்கபாதுகாப்பும் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

தென்னார்காடு, செங்கை அண்ணா மாவட்டங்களிலுள்ள ஏரிகள் குளங்கள் இந்த மழையினால் நிரம்பியுள்ளன.

சென்னையில் உள்ள சில பாடசாலைகளிலும் மண்டபங்களிலும் பாதிக்கப்பட்டவர்கள் தங்கவைக்கப்பட்டுஒருலட்சத்துக்கும் மேற்பட்ட உணவுப் பார்சல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு முதலமைச்சர் கூறினார்.

சென்னையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு மேற்கொள்ளப்படும் நிவாரண உதவிகளை முதலமைச்சர் நேரில் சென்று பார்வையிட்டார்.

## உல்லாசப்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கருத்துத் தெரிவிக்கையில் விபத்து இயந்திரக்கோளாறினால் ஏற்பட்டிருக்கலாம் என்றும் பயங்கரவாதம் அல்லது நாசவேலைக்கும் விபத்துக்கும் சம்பந்தமில்லை என்றார்.

சீகிரி உல்லாசப் பயணிகள் ஹோட்டல் கொள்ளை தொடர்பாக இதுவரை முப்பது பேர் சந்தேகத்தின்பேரில் கைதாகியுள்ளார்கள். விசாரணைகள் தொடர்கின்றன.

ஜே. வி. பி. இக்கொள்ளையின் சூத்திரதாரியா இல்லையாஎனபதை இப்பொழுது

## சூறாவளியை எதிர்கொள்ள அந்திரா மாநிலம் தயார்

## புதுக்காத்தான்குடியில் மினிச் சூறாவளி

(காத்தான்குடி)

தற்போதுள்ள கால நிலை காரணமாக கிழக்குப் பகுதியில் சிறிய சூறாவளி வீசியதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு புதுக்காத்தான்குடியில் திடீரென புயல் வீசியதில் இருபத்தெட்டு வீடுகள் சேதமடைந்துள்ளன. இதில் இரு கடைகளும் அடங்கும்

இச் சம்பவம் குறித்து காத்தான்குடி உதவி அரசாங்க அதிபர் ஜனாப் எம். உதுமான் லெப்பை சமூக சேவை அத்தியட்சகர் திரு. இரா. தியாகராசா விடம் முறையிட்டுள்ளார்.

உதவி அத்தியட்சகர் சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் சென்று நிலமைகளை அவதானித்து நிவாரணம் வழங்க சமூக சேவை ஆணையாளருக்கு அறிக்கை சமர்பித்துள்ளார்.

## தமிழீழ இணக்க...

(1ஆம் பக்க தொடர்ச்சி

பட்டுள்ளது.

இவ் இணக்க மன்றுகள் சிறப்பாக நடைபெற தமிழ் மக்களின் உதவியை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் மக்களின் ஒத்துழைப்பை எதிர்பார்கின்றார்கள். மக்களின் ஆக்க பூர்வமான ஆலோசனையும், கருத்துக்களையும் எதிர்பார்த்துள்ளார்கள்.

இவ் இணக்க மன்றுகள் பற்றிய ஆலோசனை வழங்க விரும்புவர்கள் தருமபுரத்தில் உள்ள விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணிதலைமைச் செயலகத்தில் உள்ள இணக்க மன்றுப் பொறுப்பாளருடன் நேரடியாகவோ. கடிதம் மூலமோ தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளார்கள். இவ் தமிழீழ இணக்க மன்றுக் கைநூல் ஐந்து ரூபாவாக விற்பனையாவதும் குறிப்பிடத்தக்கது.

## சாம் இறுதிச்சடங்கு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவரது ஒரே மகனிடம் கையளிக்கப்பட்டது. சூட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்து கொழும்பு பெரியாஸ்பத்திரியில் தீவிர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டிருக்கும் திருமதி கலா தம்பிமுத்துவுக்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன,

விடுதிகளில் நேற்றும் தேடுதல்

### இராணுவம் இருப்பதால்

## அச்சக கூட்டுத்தாபனம் இயங்க முடியாத நிலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கிரான் அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபன கட்டிடத்தில் தொடர்ந்து இலங்கை இராணுவம் நிலை கொண்டிருப்பதால் அச்சக கூட்டுத்தாபனம் இயங்க முடியாத நிலையிலுள்ளது.

மேற்படி கூட்டுத்தாபனம் இயங்குவதற்கான சகல இயந்திரங்களும் பொருத்தப்பட்ட நிலையிலுள்ளது,

ஆனால் இராணுவமுகாம் காரணமாக செயல்பாடுகளை ஆரம்பிக்க முடியாத நிலையிலுள்ளது என சம்பந்தப்பட்ட அதிகாரி தெரிவித்தார்.

இக் கூட்டுத்தாபனம் செயல்படத் தொடங்குமானால் சுமார் இரண்டாயிரம் இளைஞர் யுவதிகள் வேலைவாய்ப்பு பெறுவார்கள்.

இவ்விவகாரத்தில் சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோருகிறார்கள். )31

## மட்டக்களப்பில் தந்திகள் தபாலிலேயே செல்கின்றன

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தபால் நிலையத்தில் ‘‘டெலி பிரின்ற்’’ தந்திச் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படாத நிலை குறித்து பொதுமக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றார்கள்.

இந்நிலையில் தந்திகள் யாவும் தபாலில் செல்லும் நிலை தொடர்ந்து காணப்படுகிறது.

பாதுகாப்புக் கருதி மேற்படி ‘டெலி பிரின்ற்’ கருவிகள் முன்னர் இராணுவ நடவடிக்கைகளின் போது எடுத்துச் செல்லப்பட்டிருந்தன.

தற்போது பாதுகாப்பான சூழ்நிலை நிலவுகின்றபோதிலும் இதுவரை அக்கருவி பொருத்தப்படவில்லை.

தபால் திணைக்களத்தின் அசமந்தப்போக்குதான் இதற்குக் காரணம் எனப் பலரும் எமது செய்தியாளரிடம் சுட்டிக் காட்டினர்.

தபால் சேவை சீராகிவரும் போது தந்திச் சேவையையும் இவ்வாறு நடாத்த வேண்டும் எனப் பொதுமக்கள் கேட்கின்றனர். (37)

## மட்டக்களப்புப் பாடசாலைகளில் மதியபோசனம் இல்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டாந்தவணை ஆரம்பமாகி இரு வாரங்களாகியும் பாடசாலைகளில் மதியஉணவு வழங்கப்படவில்லை.

இது குறித்துப் பெற்றோரும் பழைய மாணவர்களும், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களும் அதிகாரிகளுக்குப் புகார் செய்துள்ளனர்.

கல்வியமைச்சிலிருந்து இதற்கான நிதி இதுவரை வந்து சேராததாலேயே மதிய உணவு வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அதிபர்கள் தெரிவிக்கின்றனர்.

அதேசமயம் கடந்த முதலாம்தவணை இறுதியில் வழங்கப்பட்ட மதியஉணவுக்கொடுப்பனவுகளும் இதுவரை கல்வித் திணைக்களத்தால் வழங்கப்படவில்லை என்றும் அதிபர்கள் தெரிவிக்கின்றனர்.

## தொம்பேயில் மினிப்புயல்

(கொழும்பு)

தொம்பே தொகுதியில் அளவத்கொட என்ற கிராமத்தை நேற்று முன்தினம் இரவு குட்டிப்புயல் தாக்கியதில் பதினைந்து வீடுகள் முற்றாகச்சேதமடைந்தன; மரங்கள் வீழ்ந்து போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டன.

## அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு

# சூறாவளியை எதிர்கொள்ள ஆந்திரா மாநிலம் தயார்

(சென்னை)

வங்காள விரிகுடாவில் நிலைகொண்டிருக்கும் புயல் ஆந்திரா கடற்கரையில் வீசக்கூடும் என்றமுன்னெச்சரிக்கையால் இப்பகுதியிலிருந்து சுமார் ஒரு லட்சத்து முப்பதாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வேறு இடங்களுக்கு அகற்றப்பட்டனர்.

இந்திய விமானப்படை கடற்படை நிவாரண வேலைகளுக்காக தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். சுமார் நானூறு நிவாரண முகாம்களும் அமைக்கப்பட்டுள்ளன.

ஆந்திரா கடற்பகுதியில் சுமார் 150 மைல் தொலைவில் இந்தப்புய[illegible]மையம் கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இந்தியக் கப்பற் கூட்டுத் ஸ்தாபனத்துக்குச் சொந்தமான கப்பல் ஒன்று வங்காள விரிகுடாவில் சூறாவளிக் காற்றில் சிக்கிக் காணாமற் போய்விட்டது என்று நேற்று இரவு இந்திய வானொலிஅறிவித்தது. கணாமற் போன கப்பலில் 62 மாலுமிகள் இருந்தார்களாம்.

## யாழ்.தேர்தல் திணைக்களத்தில்

# வாக்காளர் இடாப்பில் பெயர்கள் பதிவு செய்யலாம்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்தில் வாக்காளர் இடாப்பில் தமது பெயர்களை பதிவு செய்யப்படாது விடுபட்டவர்கள் தங்கள் பெயர்களைத் தவற விடாது யாழ். தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்து கொள்வதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

வாக்காளர் பட்டியலில் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு யாழ். கச்சேரியில் உள்ள தேர்தல் திணைக்களம் பொது மக்களைக் கோரியுள்ளது.

யாழ். தேர்தல் திணைக்களம் கடைசியாக 1987 ஆம் ஆண்டிலேயே வாக்காளர் பதிவை மேற் கொண்டது. நாட்டிலேற்பட்டஅசாதாரண சூழ்நிலையினால் தேர் தல் திணைக்களம் இயங்காமையினால் 1988, 1989 ஆம் ஆண்டுகளில் வாக்காளர் பதிவு முற்றாக நடைபெறவில்லை.

எனவே இவ்வாண்டு ஜூன் மாதத்தில் இருந்து புதிதாக இடாப்புப் பதிவு செய்யும் வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கான பதிவுப் பத்திரங்கள் யாழ். தேர்தல் திணைக்களத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

விண்ப்பணப் பத்திரங்களை. பெற விருபுபவர்ம் யாழ்ள செயலக தேசிய வீடமைப்புத் திணைக்கள 3ஆம் மாடியில் உள்ள யாழ். தேர்தல் திணைக்களத்தில் நேரில் சென்று பெற்று ஆவன செய்யும்படி யாழ். தேர்தல் திணைக்கள உயரதிகாரி ஈழநாதத்துக்கு தெரிவித்துள்ளார். (24)

## நயினாதீவு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த மாதம் பிற்பகுதியில் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் ஆரம்பமாகவிருப்பதால் அதற்குமுன்னர் இப்பாலம் திருத்தப்படாவிட்டால் பிரயாணிகள் போக்குவரத்துச் செய்வதில் பலத்த கஷ்டங்களை அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்படும் என அங்குள்ள பொதுமக்களும் பொதுஸ்தாபனங்களும் புகார்களைத் தெரிவிக்கின்றனர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31- ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மே மாதம் 10-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ரணைகள் தொடர்கின்றன.

ஜே. வி. பி. இக்கொள்ளையின் சூத்திரதாரியா இல்லையாஎனபதை இப்பொழுது சொல்ல முடியாது என்று பொலிஸ்மா அதிபர் ஏனெஸ்ட் பெரேரா தெரிவித்தார்.

இதேவேளை பாதுகாப்புப் படையினர் ஹெபரணை காடுகளைச்சுற்றிவளைத்துத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். மின்னேரியாவில் உள்ளபடைப்பிரிவுடன்இணைந்துகட்டுநாயக்கா, கொழும்பு விமானப் படைப் பிரிவுகளும் தேடும்நடவடிக்கைகளிலீடுபட்டுள்ளன. ஹெபரணைக் காடுகளில் ஸ்ரீ லங்கா இராணுவமும் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளது.

## பயணி

1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவம் கடந்[illegible] ஞாயிற்றுக்கிழமை மைத்திரிபுர வாகன சடுப்பு சோதனையில் நடைபெற்றது. (37)

## புனர்நிர்மாணம்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு மரத்திற்கு பதிலாக இரும்புத் தகடுகளை உபயோகிக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். கடற்கரையை அண்டியுள்ள பாடசாலைகளுக்கு நிச்சயமாக மரங்களே பாவிக்க வேண்டிய நிலை உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (லோ)

## ரயில் சேவை

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

டிருந்ததுஇதனால் ஒன்றுமாறி ஒன்று கொழும்பு சென்று வரக்கூடியதாக இருந்தது ஆனால் இப்போது இவ்வாறு சுழற்சிமுறை சேவை செய்வதற்கு மேலும் ஓர் இயந்திரம் வடபகுதி புகையிரத சேவைக்குத் தேவை எனவும் அவ் அதிகாரிகள் கூறினர்.

போக்குவரத்து அமைச்சு இவ்வாறு அரை குறையாக சேவை செய்து வருவதுபற்றி அவர்கள் கூறும் போது திடீரென வடபகுதியில் மீண்டும் ஒரு குழப்பநிலை ஏற்படுமிடத்து வடபகுதியில் ஒரு இயந்திரத்தை தாம் இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும் என போக்குவரத்து அமைச்சு பயப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (லோ)

திய உளவுப்படை, இந்திய அமைதிப்படை என்ற போர்வையில் வந்த இந்திய ஆக்கிரமிப்புபடை அனைத்து சக்திகளுடைய செயல்திறனும் தமிழீழத்தில் தனித்துவமான போராட்ட தலைவனின் வழிகாட்டலினாலும் இலட்சியப் பற்றினாலும் தெளிவான சிந்தனை ஆற்றலினாலும் அனைத்து சக்திகளையும் இராணுவ ரீதியாக முறியடித்து தலைகுனிய வைத்தவர் பிரபாகரன்

பிரபாகரனை ஏமாற்ற நினைத்தவர்கள் பிரபாகரனிடம் ஏமாந்த வரலாறுதான் உண்டு பிரபாகரன் ஏமாந்ததாக வரலாறு இல்லை.

எமது தலைவரை இனிமேலும் யாராலும் ஏமாற்ற முடியாது என்ற நம்பிக்கை தமிழீழ மக்களின் மனங்களில் ஆழமாகப் பதிந்துவிட்டது. கடந்தகால வரலாற்றை இலங்கை அரசு பாடமாகக் கொண்டிருந்தும் தமிழீழ மக்களையோ, தமிழீழத் தலைவரையோ ஏமாற்ற நினைத்தால் அதுவே தமிழீழத்திற்கான அத்திவாரமாகும். எனவே இன்றைய காலகட்டத்தை இலங்கை அரசு சரியாகப் பயன்படுத்தி. உண்மையானசமாதானத்திற்கான வழியினை ஏற்படுத்தினால் ஒவ்வொரு மக்களும் எதிர்பார்க்கும் அமைதி, சமாதானம், மகிழ்ச்சியான வாழ்வு ஏற்படும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டுள்ளோம்.

## சாம் தம்பிமுத்து

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சமாதானத்தை விரும்பும் சகல மக்களும் இக்கொலைச் சம்பவத்தைக் கண்டிப்பார்கள்

பகைமையை, பகைமையால் அழிக்க முடியாது. அன்பினால் மாத்திரமே அதனை வெற்றி கொள்ள முடியும் என்ற புத்தபிரானின் போதனை இந்த நேரம் நினைவுக்கு வருகிறது. இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

## நீர்த்தாக்கி

(1ஆம் பக்க தொடர்ச்சி)

மாநகரசபை ஆணையாளர் திறந்து வைத்தார்.

நீர்வழங்கல் சபை பொறியியலாளரும், யுனிசேவ் நிறுவனத்தினரும் இவ் வைபத்தில் கலந்து கொண்டனர்.

காப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன,

## விடுதிகளில் நேற்றும் தேடுதல்

திரு. சாம்தம்பிமுத்துவின் கொலையைத் தொடர்ந்து நேற்றும் வெள்ளவத்தை, கொச்சிக்கடைப் பகுதிகளிலுள்ள விடுதிகளிலும் வீடுகள் சிலவற்றிலும் பொலிசார் தேடுதல் வேட்டை நடத்தினர். சில குறுக்கு வீதிகளில் வாகனங்களும் சோதனையிடப்பட்டன.

## கிணற்றுள் . .

(1ஆம் பக்க தொடர்ச்சி)

பிளிறிய சத்தம் கேட்டு அயலவர்கள் ஓடிச்சென்று பார்த்த போது யானை விழுந்திருப்பது தெரிந்தது.

சுமார் பதினைந்தடி ஆழமான கிணற்றுக்குள் யானை விழுந்திருப்பதாகவும், மக்கள் அதற்கான உணவுகளை போட்டு வருகிறார்கள் என்றும், கிணற்றின் ஒரு பகுதியை இடித்துத்தான் மேற்படி யானையை மீட்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (தி)

## ராக்கிங்கில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும், பல்கலைக் கழகங்களைச் சுற்றி கண்காணிப்பை மேற்கொள்ளுமாறு தான் பொலிஸ் மா அதிபருக்கு அறிவுறுத்தியிருப்பதாக அமைச்சரவை வாராந்த பத்திரிகையாளர் மகாநாட்டின்போது அமைச்சர் ரஞ்சன் தெரிவித்தார்.

வெளியார்கள் பல்கலைக் கழக வளாகங்களுக்குள் வருவதாக தான் அறிகிறேன். வெளியார்கள் பல்கலைக் கழகங்களுக்குள் நுழைவதற்கு உபவேந்தர்களே பொறுப்பாளிகளாவர். எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் மாணவர் சிலர் ராக்கிங் தொடர்பாக எமக்குத் தகவல் தர அமர்த்தப்பட்டிருக் கிறார்கள் விரைவில் தாம் குற்றவாளிகளை இனம்கண்டு விடுவோம் மௌனமாகப் பெண்கள் துன்பத்தை அனுபவியாமல் ராக்கிங் என்ற பெயரில் இம்சிக்கப்படும்போது எமக்கு முறைப்பாடு செய்யவேண்டும் - இவ்வாறு ரஞ்சன் விஜயரெட்ணா தெரிவித்தார்.

அதேசமயம் கடந்த முத கள் பாதிக்கப்பட்டன.


## அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு பின்போடப்பட்டுள்ளது

ஸ்ரீ துர்க்கை அம்பாள் தேவஸ்தான முன்றலில் நேற்று மாலை 5-30 மணிக்கு அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த சீட்டிழுப்பு இயந்திரக் கோளாறு காரணமாக மறு அறிவித்தல் வரை பின்போடப்பட்டுள்ளது என்பதை யாழ். மக்கள் கழகத்தினர் அறியத்தருகின்றார்கள்.

தகவல்

யூரோப் சைனாக் ஹோட்டல்
89, 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(B 912)



# மரண அறிவித்தல்

## அண்ணாமலை சங்கரப்பிள்ளை

வேலணை வடக்கைச் சேர்ந்தவரும் அக்குறசி பிரபல வர்த்தகரும், யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி லதா கபே உரிமையாளருமாகிய அண்ணாமலை - சங்கரப்பிள்ளை 9.5.90 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்றவர்களான அண்ணாமலை - நாகம்மா ஆகியோரின் அன்புப் புதல்வனும், பாலசரஸ்வதியின் அன்புக் கணவரும், ரமணி (யா/உடுவில் மகளிர் கல்லூரி) சாந்தி (யா/சே.வை.து ம.ம.வித்தியாலயம்), ஜெயந்தி (யா. வேம்படி மகளிர் கல்லூரி), சுரேஸ் (கனடா), சுகந்தி, கௌதமி (யா. வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், தம்பையா காலஞ்சென்ற நாகம்மா ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்ற பாக்கியலட்சுமி, காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், பரமேஸ்வரி, கணபதிப்பிள்ளை (விஜயா றேடிங் ஏஜன்சி கொழும்பு) நவமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற குமாரசிங்கம், சறோஜினிதேவி, தியாகராசா, ருக்மணிதேவி, சுப்பிரமணியம், நாகேஸ்வரி, காலஞ்சென்ற மங்கயற்கரசி, மனோகரன் (அக்குறசி) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 10.5 90 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக வேலணை வடக்கு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்,

வேலணை வடக்கு,
வேலணை

தகவல் :
திருமதிச. பாலசரஸ்வதி

R,465